வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.12.2021 சனிக்கிழமை | இதழ் : 13 | பக்கங்கள் : 16




# அனைத்திலும் அரசியல் நோக்கத்துடன் செயல்பட்டால் நாம் உயரவே முடியாது!

## கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு சம்பந்தன் அறிவுரை



கொழும்பு, டிசெம்பர் 18

"உள்ளூராட்சி சபையில் அல்லது மாகாண சபையில் அல்லது பாராளுமன்றத்தில், அனைத்து விடயங்களிலும் அரசியல் நோக்கத்துடன் செயல்பட்டால் எதனையுமே எம்மால் நிறைவேற்ற முடியாமல் - அமுல்படுத்த முடியாமல் - ஒரு முன்னேற்றத்தை அடைய முடியாமல் போய்விடும். இதனை சகலரும் மனதில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்று தமிழ் ஊடகங்களிடம் தெரிவித்தார். 15

## அரசியல் காரணங்களுக்காகவே உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

### தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சாடல்!

கொழும்பு, டிசெ. 18

அரசியல் காரணங்களுக்காக அரசாங்கம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க திட்டமிட்டுள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர் 15

## சீனா, இந்தியாவுக்கு வடக்கில் இடங்கள்!

### அமைச்சர் வாசுதேவ

வவுனியா, டிசெ. 18

வடக்கில் சீனாவும் இந்தியாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால், வட பகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள் என நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். 15

## 'டான் சினி மரதன்' குறும்பட போட்டி டான் ரீ. வி. கலையகத்தில் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், டிசெ. 18

டான் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் இடம்பெறும் மாபெரும் 'டான்சினி மரதன்' குறும்படபோட்டி நேற்று வெள்ளிக்கிழமை டான் தொலைக்காட்சி யாழ்ப்பாண பிரதான கலையகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் குறும்பட போட்டி வரும் ஏப்ரல் மாதம் 15

## கொரோனா தொற்றால் மேலும் 22 பேர் மரணம்

கொழும்பு, டிச. 18

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் 15

### புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயற்சி;

## இலங்கையர்கள் 15 பேருக்கு எதிராக இந்தியாவில் குற்றப்பத்திரம் தாக்கல்

புதுடில்லி, டிசெ. 18

இலங்கையர்கள் 15 பேருக்கு எதிராக தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் புத்துயிர் அளிக்க முயன்றதாக தெரிவித்து, இந்திய தேசியப் புலனாய்வு முகவரகம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

இந்தியாவுக்கு ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தியமை தொடர்பாக கைது செய்யப்பட்ட 15 பேருக்கு 15

## இது முடிவுமட்டுமல்ல ஆரம்பமும்

### படகில் சென்று இராமர் பாலத்தை பார்த்தபின் சீன தூதர் சொன்னார்!



மன்னார், டிசெ. 18

வட பகுதிக்கான தனது பயணம் முடிவல்ல, ஆரம்பமாக அமைந்துள்ளது என்று இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் நேற்றுத் தெரிவித்தார்.

வட மாகாணத்திற்கான பயணத்தை நிறைவு செய்யும் வகையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள இராமர் பாலத்தை நேற்று 15

## 80 வீத உணவகங்கள் இன்றுமுதல் மூடப்படும்!

### இலங்கை சிற்றுண்டிசாலை சங்கம்

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக இன்று முதல் 80 சதவீதமான சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்கள் மூடப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் 15

## கனடாவில் விபத்து யாழ். பெண் பலி!

றொறன்ரோ, டிசெ. 18

கனடாவில் இடம்பெற்ற கார் விபத்தில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட பெண் ஒருவர் பலியானார்.

கனடாவின், மிசிசாகா பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# யாழில் வீடு புகுந்து வன்முறையில் ஈடுபட்ட மூவர் வாள்களுடன் கைது



யாழ்ப்பாணம், டிச. 18

மானிப்பாயில் வீடு ஒன்றுக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நவாலி மற்றும் கொக்குவிலைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களே யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 2 வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்குள் கடந்த புதன் கிழமை புகுந்த கும்பல் பெறுமதியான பொருள்களைச் சேதப்படுத்தியதுடன் பெற்றோல் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

(இ - 03)

## ‘யாவர்க்கும் நலம்’ கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் ‘யாவர்க்கும் நலம்’ மெய்நிகர் வழி நிகழ்வில் இன்று சனிக்கிழமை “தமிழர் வாழ்வியலில் தமிழ் மருத்துவம்” எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் ஆயுள் வேத வைத்தியர் சிவரூபன் அனுஷியா வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கருத்தமர்வில் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வடக்கில் நேற்று மூன்று தொற்றாளர்!



யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வடக்கில் மேலும் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகிய ஆய்வு கூடங்களில் நேற்று நடத்தப்பட்ட சோதனைகளின் அடிப்படையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும், முழங்காவில் ஆதார மருத்துவமனையில் ஒருவர் என்று இருவரும், யாழ்ப்பாணம் - சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவரும் என மூவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

(ஐ)

## கஞ்சா போதைப் பொருளுடன் சங்கானையில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 18

சங்கானையில் 320 கிராம் கஞ்சாவுடன் 19 வயது இளைஞர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று சித்தங்கேணி மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று மதியம் 12. 30 மணியளவில் சங்கானை - தொட்டிலடி சந்தி பகுதியில் வைத்தே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சித்தங்கேணி மதுவரி நிலைய உத்தியோகத்தர்களால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுத்திருந்தனர். முச்சக்கரவண்டியில் கஞ்சாவை கடத்தியபோதே அவர் கைது செய்யப்பட்டதுடன், முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டது.

கைதான நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# 900 மில்லியன் அமெ. டொலரை அரசு 2022 ஜனவரிக்குள் செலுத்தவேண்டும்

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 18

நாடு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியில் இருந்து மீள அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த மாதத்துக்குள் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அடுத்த வருடத்தின் முதல் மாதத்துக்குள் நாடு மொத்தமாக 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

43ஆவது படையணியின் சட்டத்தரணிகள் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், அடுத்த மாதத்துக்குள் இலங்கை 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மைப் பத்திரங்களைச் செலுத்தவேண்டும். அபிவிருத்திப் பத்திரங்களாக 242 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாடு செலுத்த வேண்டும்.

மேலும், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜெய்க்கா ஆகியவற்றிற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான கடனைச் செலுத்த வேண்டும். அடுத்த வருடத்தின் முதல் மாதத்துக்குள் நாடு மொத்தமாக 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டும்.

நாட்டில் 115 கோடி டொலர்கள் மட்டுமே வெளிநாட்டு கையிருப்பு உள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கடனை செலுத்த முடியாத கட்டத்துக்கு நாடு தள்ளப்பட்டுவிடும்-என்றார். (அ)

### கல்வி tv CHANNEL-1

18.12.2021
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

18.12.2021
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
18.12.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
**021 730 1370**

# கூட்டுத் தலைமை?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், வட மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம், கூட்டுத்தலைமையொன்றே இன்றைய காலத்திற்கு சரியானது. அதன் மூலமே கூட்டமைப்பை தொடர்ந்தும் ஒற்றுமையாக முன்கொண்டு செல்ல முடியுமென்று தெரிவித்திருக்கின்றார். கடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்தித்திருந்தது. இதற்கு கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகளும் அதேவேளை, தமிழ் அரசு கட்சிக்குள் காணப்பட்ட உள் முரண்பாடுகளுமே காரணம். இந்த முரண்பாடுகளின் விளைவாகவே, தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர் - சம்பந்தனை விடவும் அரசியலில் மூத்தவரான மாவை சேனாதிராசா தோல்வியடைந்தார் - கூட்டமைப்பு 14 ஆசனங்களிலிருந்து 10இற்கு கீழிறங்கியது. கூட்டமைப்பிற்கு மாற்றாகத் தங்களை முன்னிறுத்தியிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி 10 வருடங்களுக்கு பின்னர் இரண்டு ஆசனங்களை பெற்றுக்கொண்டது.

விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் ஓர் ஆசனத்தை பெற்றுக் கொண்டது. கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு உள் முரண்பாடுகள் காரணமாக இருந்த அதேவேளை, கூட்டமைப்புக்கும் ரணில் - மைத்திரி கூட்டரசாங்கம் - முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான தேனிலவும் ஒரு பிரதான காரணமாக இருந்தது. புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முடியுமென்று நம்பியிருந்த கூட்டமைப்பு, அந்த முயற்சி தோல்வியடைந்தால் அடுத்தது என்ன? என்னும் கேள்விக்கு பதிலின்றி இருந்தது. இப்போதும் கூட்டமைப்பின் அணுகுமுறை முன்னைய காலத்தை பிரதி செய்வதுபோல்தான் இருக்கின்றது. அதாவது, கூட்டமைப்பு கூறும் ஏ-திட்டம் தோல்வியடைந்தால் திட்டம்-பி என்ன என்னும் கேள்விக்கு பதிலின்றி இருக்கின்றது. செல்வம் அடைக்கலநாதன் - சித்தார்த்தன் கூட்டில் இடம்பெற்றுவரும் தற்போதைய சந்திப்புக்கள் சற்று மாறுபட்ட வகையில் இருக்கின்றன.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர்கள் இன்னும் சரியாக மதிப்பீடு செய்யவில்லை. அவ்வாறு மதிப்பீடு செய்திருந்தால் மீளவும் பொதுவெளிகளில் மோத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இவ்வாறானதொரு நிலைமைக்கு சம்பந்தனின் அரசியல் தலைமைத்துவ பலவீனமே பிரதான காரணமாகும். சம்பந்தன் 2009இற்கு பின்னரான சூழலில் தனக்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தை வினைத்திறனுடன் கையாண்டிருந்தால், இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆரம்பத்தில் சம்பந்தனின் தலைமைத்துவத்தோடு ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். பின்னர் டி. பி. எல். எவ். (புளொட்) ஆகியவை எவ்வித சந்தேகமும் கொண்டிருக்கவில்லை. ஆயுத விடுதலைப் போராட்ட பின்னணியில் வந்தவர்கள் சம்பந்தனை தங்களின் தலைவராக ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

ஆனால், சம்பந்தனோ அவர்களை சமத்துவமாக நடத்தவில்லை. அவர்களின் கட்சிகளுக்கு சமதையான இடத்தை கொடுக்கவில்லை. தீர்மானங்களின் அவர்களுக்கு இடமளிக்கவில்லை. அவர்களை பல்வேறு வழிகளிலும் அவமானப்படுத்தினார். அவர்களோடு அனுபவத்தோடும் வரலாற்றோடும் ஒப்பிட்டால் எந்த வகையிலும் பொருத்தமற்றவர்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் இடத்தைப் புறக்கணித்தார். இறுதியான அமெரிக்க பயணம் வரையில் இதுதான் நடந்தது. இதன் காரணமாக கூட்டமைப்பு உள்ளுக்குள் சிதைந்து கொண்டிருந்தது. இறுதியில் தமிழர் தாயகத்தின் பெரும் தலைமை என்னும் இடத்தை இழந்து, பிரதான கட்சியென்னும் இடத்திற்கு கூட்டமைப்பு கீழறங்கியிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில்தான் சம்பந்தனுக்கு பின்னரான தலைமைத்துவம் தொடர்பில் கேள்விகள் எழுந்திருக்கின்றன. எதிர்காலத்தில், ஒரு தனித் தலைவரின் கீழ் கூட்டமைப்பு நிலைப்பதற்கான வாய்ப்பில்லை. ஒப்பீட்டடிப்படையில் மூத்தவரான மாவை சேனாதியால்கூட, அதனை செய்யமுடியாது. எனவே, மூன்று கட்சிகளையும் சமத்துவமாகக் கையாளும் வகையிலான தலைவர்களின் கூட்டு தலைமைத்துவம் ஒன்றுதான் சாத்தியமானது. அதனை அடிப்படையாகக் கொண்டுதான் நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# இந்தியா குறித்து அவதானமாக இருக்கும் சீனா!

-அலசுவது இராஜதந்திரி-




*இந்தியா யாழ்ப்பாணத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது என்ற கேள்வியை பருத்தித் துறையில் அமைந்துள்ள இலங்கையின் வட முனையிலிருந்து சீன தூதுவர் கீ சென் ஹொங் கேட்டுள்ளார். அப்போது அருகில் நின்றோர் 30 கிலோ மீற்றர் என்று பதிலளித்துள்ளனர்.*

*சீன தூதுவர் கீ சென் ஹொங் பருத்தித் துறை முனையிலிருந்து இந்தியா எவ்வளவு தூரத்திலிருக்கின்றது என்ற கேள்வியைக் கேட்டி ருப்பதை நோக்கும்போது பருத்தித் துறையின் வட முனையிலிருந்து இந்தியாவுக்குள் நுழையும் உத்தேசத்தை சீனா கொண்டுள்ளதோ என்றுகூட எண்ணத் தோன்றும்.*

*இந்தியா பருத்தித்துறையிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கின்றது என்று சீனத்தூதுவர் கேட்டதை மற்றுமொரு கோணத்திலிருந்து நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் சீனா தனது விருப்பத்தை வெளியிட்டுள்ள போதிலும் வட பகுதியை இந்தியாவை தெற்கே சூழ்ந்திருப்பதற்கான ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக சீனா கருதுகின்றதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.*

*ஆயினும், சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா பற்றி குறிப்பிட்டபோது அருணாசல பிரதேசத்தில் இந்திய - சீன எல்லையில் அயலவர்களாக இரு நாடுகளும் இருப்பதாக கூறியதோடு வடக்கே சீனா மேற்கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்களால் இந்தியாவுக்கு ஆபத்து என்று கூறுவது அபத்தமானது எனவும் தெரிவித்துள்ளார்.*

*இதுதவிர, இந்தியாவுக்குள் சீனக் கம்பனிகள் இருக்கின்றன எனவும் சீனாவுக்குள்கூட இந்திய நிறுவனங்கள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ள சீனத் தூதுவர், பிராந்திய ரீதியாக இலங்கையின் வட பகுதியை தனது வல்லாதிக்க நலன்களுக்காக பயன்படுத்தும் எண்ணம் சீனாவிடம் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இந்தியாவிலிருந்த 30 கடல் மைல் தொலைவிலேயே இலங்கை காணப்படுகின்றது. ஆனால், இந்தியாவின் மேற்கு எல்லையிலுள்ள பாகிஸ்தானுடனும் கிழக்கு எல்லையைக் கொண்டுள்ள பங்களாதேஷினதும் நட்பு நாடாக சீனா இருந்து வருகின்றது. பங்களாதேஷிலும் பாகிஸ்தானிலும் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ள சீனா, அண்மையில் பங்களாதேஷில் புகையிரத பாதைத்திட்டமொன்றை ஆரம்பித்து செயல்படுத்தி வருகின்றது.*

*இருந்தபோதிலும் இந்தியாவும், சீனாவும் பரஸ்பரம் அவற்றின் இராணுவ செயல்பாடுகளுடன் சம்பந்தமில்லாத நடவடிக்கைகளை கூட சந்தேகக்கண்கொண்டே பார்த்து வருகின்றன.*

*அண்மையில் தமிழகத்தில் இந்திய முப்படைத்தளபதி ஜெனரல் பிபின் ராவத் ஹெலிகொப்டர் அனர்த்தத்தில் பலியானதன் பின்னணியில்கூட சீனா இருந்திருக்கலாமென்ற சந்தேகமும் இந்தியாவில் வலுவடைந்திருந்தது.*

*ஏனெனில், ஜெனரல் பிபின் ராவத் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு எல்லை தாண்டிய இராணுவ ரீதியான நகர்வுகளை மேற்கொள்வதில் அச்சுறுத்தலாக இருந்தார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சீனாவைப் பொறுத்தவரை இலங்கையையும் தாண்டி ஆபிரிக்க கண்டத்திலும் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது.*


*சீனா இராணுவ ரீதியாக பெரும்பலத்தை கொண்டிருந்தாலும் அதன் விஸ்தரிப்புக்கு அதீத பொருளாதார வளர்ச்சியே காரணமாக இருக்கின்றது.*

*இலங்கையைப் பொறுத்தவரை போருக்குப் பின்னரான சூழலில் பொருளாதார நிலவரம் பெருமளவில் வளர்ச்சி காணும் என்றே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால், அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ அனுபவமற்ற ஒரு தலைமைத்துவத்தைக் கொண்ட நாடாக இலங்கை இருக்கின்ற நிலையில் எந்தவொரு நாட்டினதும் உதவி ஒத்தாசையை இலங்கை பெற்றிருந்தாலும் பொருளாதார நிலவரத்தை உறுதியாகப் பேண முடியாத நிலையே காணப்படுகின்றது.*

*இந்நிலையில், தமது யாழ்ப்பாண விஜயம் குறித்து இந்தியாவோ அல்லது வேறு அரசியல் தரப்பினரோ எவ்வித கருத்துக் கண்ணோட்டங்களையும் முன்வைக்காத நிலையில் சீனத் தூதுவர் கீ சென் ஹொங், வடக்கே சீனா மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்று கருதுவது தவறான அபிப்பிராயமாகும் என்று தாமாகவே குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே, சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் வைத்து இந்தியா பற்றி குறிப்பிட்டதை நோக்கும்போது சீனாவே இலங்கையில் அதன் ஒவ்வொரு நகர்வு குறித்தும் இந்தியா தொடர்பில் அவதானமாக இருக்கின்றதென்பதை ஊகிக்க முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 18 சனிக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 03
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : பௌர்ணமி




**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். உங்களது செயல் இலாபத்தை நோக்கி நகரும். மகிழ்ச்சியான நாள். பிறர் மூலம் பாராட்டு கிடைக்கும். வழக்கு சாதகமாகும்.

**இடபம்**
வியாபாரத்தில் இலாபம் உண்டு. எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். பணச்சிக்கல் இருக்காது. தொழில், வியாபாரம் சூடு பிடிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். மகிழ்ச்சி

**மிதுனம்**
திருமண முயற்சியில் சாதகமான பலன் கிடைக்கும். நண்பர்களிடம் கடந்த கால நினைவுகளை கூறி மகிழ்ச்சி கொள்வீர்கள். உறவினர் களது குடும்பங்களைச் சேர்த்து வைப்பீர்கள்.

**கடகம்**
சிறு சிறு உடல் உபாதைகளுக்கு மனம் பதற வேண்டாம். குடும்பத்தில் கலகலப்பு நிலவும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். நண்பர்களின் இதமான பேச்சு மன ஆறுதலை அளிக்கும்.

**சிம்மம்**
உங்களின் செயல் ஒன்று பலருக்கு மகிழ்ச்சியையும், நன்மையையும் தரும். தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் உங்களின் அந்தஸ்து உயரும்.

**கன்னி**
சேமிக்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகரிக்கும். பயம் நீங்கும். குடும்பத்தை சேர்ந்த ஒருவரால் பெரிய நன்மை ஒன்று வரும். உங்களு டைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்த ஒருவர் அறிமுகமாவார்.

**துலாம்**
தாயார் மகிழ்வார். யாரையும் மட்டம் தட்டிப் பேச வேண்டாம். மனசாட்சிக்கு விரோதமான செயல்களை எக்காலத்திலும் செய்யாதீர்கள். வியா பாரம் தழைக்கும்.

**விருட்சிகம்**
சிறப்பான நாள். உடன்பிறந்தவர்கள் அன்பாக இருப்பர். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். எதிர்கால நலனுக்காக திட்டமிடுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும்.

**தனுசு**
பிரியமானவர்களுக்காக சில விஷயங்களை செய்வீர்கள். உங்களால் உயர்ந்த சிலரை இன்று சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். பிறரால் பாராட்டப்படுவீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு பலிதமாகும் நாள்.

**மகரம்**
வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். மனக்குறை நீங்கும். புதிய திருப்பம் ஏற்படும். மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கூடும்.

**கும்பம்**
பணியாளர்களுக்கு பணிச்சுமையால் உடல் அசதி வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லைகள் உண்டு. உங்களது முன் கோபத்தால் நல்லவர்களை இழந்துவிடாதீர்கள்.

**மீனம்**
சகோதர வகையில் உதவியும், அன்பும் கிடைக்கும். பல நாள் விரும்பிய பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். மனதில் உற்சாகமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும்.

# அ.தி.மு.கவை யாராலும் அசைக்கக்கூட முடியாது

## சேலம் ஆர்ப்பாட்டத்தில் எடப்பாடி

சென்னை, டிசெ. 18,

“அ.தி.மு.கவை வீழ்த்த எந்த கொம்பனாலும் முடியாது. அ.தி.மு.கவை யாராலும் அசைத்துக் கூட பார்க்க முடியாது. ஒரு தொண்டனைக் கூட தொட்டுப் பார்க்க முடியாது” என முன்னாள் தமிழக முதல்வரும், அதிமுக இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.




தி.மு.க. அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் அதிமுகவினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள நாட்டாண்மை கட்டடம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், “கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆச்சு” என்று தி. மு. க. அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

பின்னர் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், “525 க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளைக் கொடுத்த தி.மு.க. அரசு, சம்பிரதாயத்திற்காக ஒரு சில வாக்குறுதிகளை மட்டும் நிறைவேற்றிவிட்டு வேறு எதையும் நிறைவேற்றவில்லை. சேலம் என்று சொன்னால் அது அ. தி. மு. கவின் கோட்டை. அதிமுகவை வீழ்த்த எந்த கொம்பனாலும் முடியாது. அதிமுகவை யாராலும் அசைத்துக் கூட பார்க்க முடியாது. ஒரு தொண்டனைக் கூட தொட்டுப் பார்க்க முடியாது.

இல்லத்தரசிகள், முதியவர்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரையும் ஏமாற்றி ஆட்சிக்கு வந்துள்ளார்கள். திமுகவுக்கு மூலதனமே பொய்தான். அப்படி பொய் வாக்குறுதி கொடுத்துத்தான் ஆட்சிக்கு வந்துள்ளார்கள்” என்று கடுமையாக விமர்சித்தார்.

தேனியில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் கலந்துகொண்டு பேசு கையில், “ஆட்சிக்கு வந்த 7 மாதங்களில் திமுக அரசு அளித்த எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை” என்று குறிப்பிட்டார்.

இதுபோன்று நாமக்கல்லில் முன்னாள் அமைச்சர் தங்கமணி தலைமையிலும், கோவையில் வேலுமணி தலைமையிலும், விழுப்புரத்தில் சி.வி.சண்முகம் தலைமையிலும், சென்னை ராயபுரத்தில் ஜெயக்குமார் தலைமையிலும் என தமிழகம் முழுவதும் அ. தி. மு.கவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சசிகலாவுக்கு எதிரான வழக்கு; நீதிமன்றம் முக்கிய உத்தரவு

பெங்களூர், டிசெ. 18,

சசிகலா சிறையிலிருந்த போது சொகுசு வசதிகளுக்காக 2 கோடி ரூபாய் லஞ்சம் கைமாறிய வழக்கில் இரண்டு வாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய ஊழல் தடுப்பு படைக்குக் கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தார். பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவருக்குச் சொகுசு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சிறையில் விதிகளை மீறி சசிகலாவுக்குத் தனி சமையல் அறை ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருந்ததாகவும் இதற் காக 2 கோடி ரூபாய் வரை கைமாறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் இதுகுறித்து விசாரணை நடத்திய ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி வினய் குமார் தலைமையி லான குழு இந்த புகாரை உறுதி செய்தது. இதையடுத்து கர்நாடக ஊழல் தடுப்பு படை சசிகலாமீது 2018ஆம் ஆண்டு வழக்கு பதிவு செய்தது.

இந்நிலையில் சென்னையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கீதா என்பவர் இவ்விவகாரம் தொடர்பாக கர்நாடக உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்தார். அதில் சசிகலா மீதான வழக்கில் குற்றப்



பத்திரிகை தாக்கல் செய்ய ஊழல் தடுப்பு படைக்கு உத்தரவிடுமாறு கோரியிருந்தார்.

தலைமை நீதிபதி அமர்வு வழக்கின் விசாரணையை 2 வாரத்திற்கு ஒத்தி வைத்தது. ஒருவேளை இரண்டு வாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாவிட்டால் உள்துறை செயலாளர் நேரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

# அ. தி. மு. க.- பா. ஜ. க. கூட்டணியில் குழப்பம் இல்லை; அண்ணாமலை

சென்னை, டிசெ. 18,

“அ.தி.மு.க.வும், பா. ஜ. க. வும் ஒரே கூட்டணியில் உள்ளன. எங்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இல்லை. எந்த குழப்பமும் இல்லை என பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நேற்று தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

”அ.தி.மு.க.வும், பா. ஜ. க. வும் ஒரே கூட்டணியில் உள்ளன. எங்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இல்லை. எந்த குழப்பமும் இல்லை. மத்திய அரசு தமிழகத்தில் நன்றாக பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு விருது வழங்கி வருகிறது. ஆனால் அமைச்சர்கள் நாங்கள் தான் செய்தோம் என பெருமை பாராட்டி வருகிறார்கள்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை. மாநில அரசு புதிய திட்டங்களை கண்டுபிடித்து செயல்படுத்தினால் தான் மக்கள் பயன்பெறுவார்கள். ஆனால், தமிழகத்தில் கடந்த 6 மாதங்களில் எந்தவித மக்கள் நலன் சார்ந்த திட்டமும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழக அரசு, மத்திய அரசின் திட்டங்களை கொப்பி அடித்து செயல்படுத்தி வருகிறது. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வீடுகளில் சோதனை நடத்துவது தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பின்னர் கருத்து சொன்னால் தான் சரியாக இருக்கும்” என அவர் கூறினார்.

# மகாவலி ஆற்றினுள் குதித்த இளம் ஜோடி

## இளைஞன் கரை சேர்ந்தார் 19 வயது மாணவி மாயமானார்

கொழும்பு, டிசெ. 18

மஹியங்கனை பாலத்தில் இருந்து காதல் ஜோடியொன்று தற்கொலை செய்யும் நோக்கத்தில் மகாவலி ஆற்றில் குதித்துள்ளது. எனினும், காதலியை நட்டாற்றில் கைவிட்டு, காதலன் நீந்தி கரையேறினார். காதலி காணாமல் போயுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இந்த சம்பவம் நடந்தது.

ரிதிமாலியத்த, கெஸ்கொல்ல பிரதேசத்தை சேர்ந்த 19 வயதான யுவதியும், ரிதிமாலியத்த, யால் அரவ, ஹெவன் கார்டன் பகுதியை சேர்ந்த 22 வயதான இளைஞனுமே இந்த விபரீத முடிவெடுத்தனர்.

நேற்று முன் தினம் காலை மேலதிக வகுப்புக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு யுவதி வெளியேறியுள்ளார்.

சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தனது கையடக்க தொலைபேசியில் வீடியோ எடுத்துள்ளார். முதலில் யுவதி ஆற்றில் குதித்துள்ளார். பின்னர் இளைஞன் ஆற்றில் குதித்தார்.

எனினும், இளைஞன் நீந்தி கரைசேர்ந்து விட்டார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

காதலனை நம்பி குதித்த யுவதி நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து மஹியங்கனை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து காணாமல் போன யுவதியை தேடும் பணியில் ஈடுபட்டனர். (அ)

# அழிவை ஏற்படுத்துவதற்கு முன்னர் டெங்கு பரவலை தடுக்கவேண்டும்

## சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 18

**நாட்டில் அழிவை ஏற்படுத்துவதற்கு முன்னர் டெங்கு பரவுவதைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.**

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஷிலந்தி செனவிரத்ன, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எதிர்வரும் இரண்டு மாதங்களில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

தாங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம் என்றும் சேதத்தைத் தணிக்க முழு முயற்சியையும் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

15 நாட்களுக்குள் 4,091 வழக்குகள் ஏற்கனவே பதிவாகியுள்ளன என்றும் இந்த ஆண்டு இதுவரை 26 இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

தற்போது, வாரத்துக்கு சராசரியாக 1800 டெங்கு நோயாளிகள் கண்டறியப்படுகிறார்கள் என்றும் இது மிகவும் ஆபத்தானது, ஏனெனில் ஏனைய சாதாரண நாட்களில் 200 வழக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு மாவட்டம் முதலிடத்தில் உள்ள மேல் மாகாணத்தில் இருந்து அதிகளவான வழக்குகள் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வழக்குகளை திருப்திகரமான நிலைக்குக் கொண்டு வர குறைந்தது இன்னும் இரண்டு மாதங்கள் ஆகும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# ஜயசுந்தரவின் இராஜினாமாவை ஏற்க மறுத்துவிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 18

ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துவிட்டாரென அறியமுடிகின்றது.

ஜனாதிபதி செயலாளர் பதவி விலகவேண்டும் என ஆளுங்கட்சியில் உள்ளவர்களே வலியுறுத்த தொடங்கினர். பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட விடயங்களுக்கு இவரே காரணம் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில் சிங்கப்பூர் சென்று நாடு திரும்பிய ஜனாதிபதியிடம் அவர் இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ள போதிலும், அதனை ஏற்க ஜனாதிபதி மறுத்துவிட்டரென அறியமுடிகின்றது. (அ)

# 12 வயது சிறுவன் துஷ்பிரயோகம்; இளைஞருக்கு 12 வருடம் கடூழியம்

கொழும்பு, டிசெ. 18

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 12 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவருக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க தீர்ப்பளித்துள்ளார்.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக ரூபா 25,000 அபராதம் விதிக்கப்பட்டது டன், பாதிக்கப்பட்டவருக்கு 150,000 ரூபா நட்டஈடாக வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

அபராதம் கட்டத் தவறினால் ஆறு மாத சிறைத் தண்டனையும், இழப்பீடு வழங்கத் தவறினால் ஓராண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கொலன்னாவை, ஓமல்பே பிரதேசத்தைச் சேர்ந்த விதாரனகே கீர்த்தி சம்பத் (வயது 27) என்பவருக்கே கடுங்காவல் மற்றும் அபராதத்துடன் கூடிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.2015 ஆம் ஆண்டு ஆண்டி இந்தச் சம்பவம் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# முல்லை மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வைத்தியசாலைச் சூழலில் நோய்க் கிருமிகள் பரவுவதை தடுப்பதுடன் வைத்தியசாலை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வைத்திய சேவையை விரைவுபடுத்தும் தொழிற்பாட்டையும் மேம்படுத்தும் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

எமது மாவட்டத்தில் சிறப்பான மருத்துவத்தை மக்கள் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தால் வழங்கப்பட்டது.

கல்கட் சில்றன்ஸ் சேவிஸ், வண் கைன்ட் அட் ஆகிய நிறுவனங்கள் குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அனுசரணை வழங்கியுள்ளன. (அ)

# மனோ கணேசன் அணியின் ஆதரவுடன் கொழும்பு மாநகரசபை பட்ஜெட் வெற்றி

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டின்கீழுள்ள கொழும்பு மாநகரசபையின் வரவு- செலவுத் திட்டம் மேலதிக 79 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 90 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

கொழும்பு மாநகரசபையில் நேற்று முன்தினம் பாதீடு முன்வைக்கப்பட்டது. இரவு 9 மணிவரை விவாதம் இடம் பெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில் பாதீடு நிறைவேறியது.

கொழும்பு மாநகரசபையில் 119 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில் 101 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுதந்திரக்கட்சி என்பவற்றின் உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். (அ)

# நிதி நெருக்கடியால் துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 18

துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கு தேவையான நிதியை வழங்க வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இணங்கியுள்ளார் என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதி செய்யப்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும், விரைவில் டொலர் வழங்கப்பட்டால் பொருட்களை விடுவிக்க முடியும் எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, தேவையான நிதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன மத்திய வங்கி ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 25 மில்லியன் டொலர்களை விடுவிக்க இணங்கியுள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாணய மாற்று விகிதக் கொள்கையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (அ)

# வேலைக்காக வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்வு

கொழும்பு, டிசெ. 18

2021 ஜனவரி முதல் இது வரையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 685 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகள் , கோவிட் தொற்யைடுத்து ஏற்பட்ட வேலையிழப்பு உள்ளிட்ட காரணங்களால் வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை காணமுடிகின்றது.

கடந்த வருடம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக நாட்டிலிருந்து 53 ஆயிரத்து 654 பேர் சென்றுள்ள நிலையில், இவ்வருடம் அந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. இவ்வருட இறுதியாகும்போது சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர்வரை வெளிநாடு செல்லக் கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)





# காணிகள் சுவீகரிப்புக்கு எதிராக வலி.வடக்கில் மக்கள் போராட்டம்!

## நில அளவை திணைக்களத்தினர் திரும்பி சென்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 18

**வலிவடக்கு பிரதேசத்தின் பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மழைக்கு மத்தியிலும் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.**

நேற்று காலை 9 மணியளவில் கீரிமலை ஜே/226, காங்கேசன்துறை மேற்கு ஜே/223 கிராம சேவகர் பிரிவுகளில் 21 பேருக்கு சொந்தமான 30 ஏக்கர் காணிகளை படையினருக்கு சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று எதிர்ப்புப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப்பலரும் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் காணி அளவீடு நடவடிக்கையை கைவிட்டு திரும்பிச் சென்றனர். (அ-03)

# நாவலர் ஆண்டு பிரகடனம்

கொழும்பு, டிசெ. 18

சைவத் தமிழ் உலகுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன ஆண்டான 2022ஆம் ஆண்டை "நாவலர் ஆண்டு" என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனம் செய்வதற்கான தீர்மானத்தை அங்கீகரிக்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரகடனத்துக்கான அங்கீகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் பிரதமரினால் அங்கீகாரக் கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகப் புகழ் பெற்ற ஓவியர் மு. பத்மவாசனால் தத்ரூபமாக வரையப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இரு திருவுருவப்



படைப்புகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவ வர்ணப் படைப்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நல்லை ஆதீனக் குரு முதல்வர் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்துக்குரிய அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள் ஆகியோரிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. மற்றைய படைப்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் வே.கந்தசாமி ஆகியோரிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர்களான எஸ்.தில்லைநடராஜா மற்றும் திருமதி சாந்தி நாவுக்கரசன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் வே.கந்தசாமி, சுந்தரலிங்கம், சுப்பிரமணியன், விக்னேஸ்வரன், ஜெயராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(அ)

## ஜனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் 10713 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ. 18

இந்த வருடம் ஜனவரி முதல் நவம்பர் 31 ஆம் திகதி வரை சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10,713 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 1,632 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை வருத்தமளிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இவர்களில் 6 முதல் 10 வயதுக்கிடைப்பட்ட 2,626 சிறுவர்களும் அடங்குவதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் கூறினார்.

## 3 வெளிநாட்டு தூதரகங்களை மூட இலங்கை அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 18

நைஜீரியாவில் உள்ள இலங்கை தூதரகத்தை மூடுவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

மேலும் ஜேர்மனியின் பிராங்போர்ட் நகரில் உள்ள துணைத் தூதரகம் மற்றும் சைப்பிரஸிலுள்ள துணைத் தூதரகம் என்பவற்றை மூடுவதற்கு வெளிவிவகார அமைச்சு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அலுவலகங்களை நிர்வகிக்க ஏற்படும் செலவினங்களை குறைப்பதற்காகவே, ஐரோப்பிய நாடுகளில் உள்ள இரு துணைத் தூதரகங்களை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், நைஜீரியாவில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே அங்குள்ள தூதரகத்தை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்களின் பராமரிப்பு மற்றும் பணியாளர்களின் கொடுப்பனவு செலவுகள், 11 பில்லியன் ரூபாவை தாண்டும் என 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



## போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாண மாவட்டத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாருக்கு போக்குவரத்து விதிமுறை தொடர்பான விசேட செயலமர்வு நேற்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாருக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே இந்த விசேட செயலமர்வு நடத்தப்பட்டது. (அ-03)



## வீதியில் போக்குவரத்து பொலிஸாரை இழுத்துச் சென்ற மோட்டார் சைக்கிள்

கொழும்பு, டிசெ. 18

புறக்கோட்டை பிரதான வீதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் சுமார் 70 மீற்றர் தூரத்துக்கு இழுத்துக்கொண்டு சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

புறக்கோட்டை பிரதான வீதியில் வாகனங்களை நிறுத்த முடியாத இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தொடர்பில் உரிய பொலிஸ் உத்தியோகத்தர் அவதானித்துள்ளார்.

இதுதொடர்பாக அங்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது யாருடையது எனத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

எனினும், சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் வந்து அதனை இயக்கிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

அவ்வேளையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வந்து இங்கு மோட்டார் சைக்கிள் நிறுத்திய குற்றச் செயல் தொடர்பில் விசாரணை செய்ய முற்படுகையில் மோட்டார் சைக்கிளை இயக்கியவர் தப்பிச் செல்ல முயன்றார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளை எட்டிப்பிடித்துள்ளார். உரிமையாளர் மோட்டார் சைக்கிளை செலுத்தியதுடன் எட்டிப் பிடித்த பொலிஸ் உத்தியோகத்தரை வீதியில் இழுத்துக்கொண்டு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் சுமார் 70 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள் மற்றுமொரு முச்சக்கர வண்டியுடன் மோதி சரிந்துள்ளது.

இதனையடுத்து பிரதான வீதியில் மக்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்றவரை தப்பிச் செல்லவிடாமல் தடுத்து வைத்திருந்ததுடன் அந்த பொலிஸ் உத்தியோகத்தரை தூக்கி உதவி செய்தனர்.

சம்பவத்தில் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஜனவரி முற்பகுதியில் அமைச்சரவை மாற்றம்!

## புதுமுகங்களுக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 18

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், சபை அமர்வுகள் கூடுவதற்கு முன்பதாக அமைச்சரவையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பத்தகுந்த அரசியல்வட்டாரங்கள் தெரிவித்தன.**

அதன்படி, புதுமுகங்களுக்கும் சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டன.

அரசுக்குள் இருக்கும் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் குறிப்பாக, அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சர்களும் தொடர்ந்து அரசின் சில செயற்பாடுகளை நேரடியாக விமர்சித்து வருகின்ற நிலையில், அவர்களை அமைச்சுப் பதவியிலிருந்து மாற்ற வேண்டும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், அமைச்சரவையில் மாற்றங்களை முன்னெடுப்பதற்கு அரசு தயாராகின்றதா என அரசின் உயர்மட்ட அதிகாரியிடம் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில், விவசாயத்துறை அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, வலுசக்தி அமைச்சு, மின்சக்தி அமைச்சு மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட சில முக்கிய அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை முன்னெடுக்கலாம் எனவும் அறியமுடிந்தது.

குறிப்பாக, அரசின் செயல்பாடுகளை நேரடியாக விமர்சித்துவரும் விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில உள்ளிட்டோரின் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை முன்னெடுப்பதற்கு கவனம் செலுத்தப்படுவதாக அறியமுடிந்தது.

விவசாயத்துறை, மின்சக்தி அமைச்சுகளில் மாற்றங்கள் முன்னெடுக்கப்படலாம் எனவும் அறியமுடிந்தது.

அதன்படி, புதிய முகங்களுக்கும் சில முஸ்லிம் உறுப்பினர்களுக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்படலாம் என அறியமுடிகின்றது .

குறிப்பாக, பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்த காரணத்தால் அரசை விமர்சித்த கோப் குழு உள்ளிட்ட பல குழுக்களின் தலைமையில் மாற்றங்கள் ஏற்படவுள்ள நிலையில், 18 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வுகள் மீண்டும் கூடுவதற்கு முன்னர் அமைச்சரவையிலும் மாற்றங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்தியுள்ளதாக அறிய முடிந்தது. (அ)

## கருத்தடை செய்தார் என பொய் குற்றச்சாட்டில் கைதான ஷாபி சிஹாப்தீன் மீண்டும் பணியில்

கொழும்பு, டிசெ. 18

சட்டவிரோத கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி சிஹாப்தீனை மீண்டும் பணியில் சேர்க்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் சம்பள நிலுவையை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிஹாப்தீன் குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியதோடு, பெண்களின் அனுமதியின்றி கருத்தடை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் குருநாகல் பிரதான நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வைத்தியர் மொஹமட் ஷாபி சிஹாப்தீன், தாய்மார்களின் கருமுட்டைக் குழாய்களை அடைத்ததாகவோ, சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்ததாகவோ அல்லது அவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகவோ இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நிரூபிக்கப்படவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 2019 ஜூலை மாதம் குருநாகல் நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது. (அ)



கிழவன்காடு கலாமன்றம் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனுக்கு “அறவழி நாயகன்” விருது வழங்கி கௌர வித்தது. கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற தெய் வீக கலையரங்கம் நிகழ்வில் இந்த கௌரவம் வழங் கப்பட்டது. (அ)

# விவசாயம் செய்யாத நிலங்களில் தென்னை பயிரிடுவதற்கு திட்டம்

கொழும்பு, டிசெ. 18

விவசாயத்துக்கு பயன்படுத்த முடியாத அனைத்து விவசாய நிலங்களிலும் தென்னை பயிரிடுவதற்கு அனுமதி வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றத்துக்கு நிலையான தீர்வுகளுடன் பசுமையான சமூக-பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் உரையாற்றிய சுற்றாடல் அமைச்சர், இது தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக வெளியிடப்படும் என்றார்.

உரப் பிரச்னை, நிலம், வனப் பாதுகாப்பு மற்றும் வனவிலங்குகள், தோட்ட மேம்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவை இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டன.

கூட்டத்தில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, இதுவரை 8 மில்லியன் லீற்றர் கரிம திரவ உரங்களும் 300,000 தொன் கரிம உரங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

தேவை அதிகரிப்பு மற்றும் விநியோகத்தில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக தற்போது கரிம உரத்தின் தரம் தொடர்பில் பிரச்னைகள் எழுந்துள்ளன எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது அமைச்சர் மஹிந்த அமரவீர பேசுகையில்,

நாட்டில் தற்போது தென்னை மரக்கன்றுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் 500,000 ரூபாயை வழங்கி தென்னை நாற்றுப் பண்ணைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார்.

## ஒமைக்ரோன் உறுதியான ஒருவர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்

### ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட ஒமைக்ரோன் வைரஸ் திரிபு தொற்றிய ஒருவர், நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்தார்.

விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சில பி.சி.ஆர் மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் குறித்த ஒமைக்ரோன் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து ஆராய்ந்தபோது, அவர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் எனத் தகவல் வெளியானது. குறித்த நபர் இலங்கைக்கு வந்தபோது, குறைந்தது ஒரு பி.சி.ஆர் பரிசோதனையேனும் செய்திருக்கின்றார்.

விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம், வைரஸ் திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுப்பது தங்களுக்கும், உலகில் வேறு நாடுகளுக்கும் முடியாமல் போயுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர், நாட்டிலிருந்து வெளியேறிய நபராக எங்களிடம் தகவல் உள்ளது. ஆனால், அவர் எவ் வாறு வெளியேறினார் என்பது குறித்து தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)




# கொழும்புச் சந்திப்பும் அரசியல் மாற்றங்களும்

■ அ.நிக்ஸன்

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை இலங்கை அரசிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காக இந்தியா விடம் ஒருமித்த குரலில் கோரவுள்ள தாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் முடி வெடுத்துள்ளன. கொழும்பில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் இனப் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்றும் ஆனால், அதனை அரசாங்கம் முழுமை யாக நடைமுறைப்படுத்த வேண்டு மெனவும் இந்த சந்திப்பில் முடிவெடுக் கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமை தாங்கினார்.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், ஈபிஆர்எல்எப் கட்சியின் மூத்த உறுப்பினர் கலா நிதி சர்வேஸ்வரன், மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகி யோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த்தேசியக் கட்சி, புளொட் ஆகிய கட்சிகளும் இக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ள வில்லை. ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

சுமார் மூன்று மணிநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர் மாநாடு ஒன்றும் இடம்பெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டனர்.

அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் முறைக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அதற்கு முன்னதாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் மீண்டும் ஒன்றுகூடி எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானத் தில் அனைத்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்புவதெ னவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இனப் பிரச்னைக்கு சமஷ்டி ஆட்சிமுறைதான் தீர்வு என்றும் அதற்கு முன்னர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் முழு மையாக நடைமுறைப்படுத்திக் காண்பிக்க வேண்டு மென மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ள சட்டம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தினுடைய புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வழங்கப்பட்ட நகல் யோசனையில், புதிய அரசியல் யாப்பின் அவசியம் பற்றி வலியுறுத்தியதோடு அதிகாரப் பரவலாக்கல் மாத்திரமே பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் தேசம் என்பது முற்றாக நீக்கம் செய்யப்பட்டு 13 ஆவது திருத்தச் சட்டம் போன்றதொரு அதிகாரப் பரவலாக்கல் முறையே அந்த நகல் யோசனையில் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. இதற்கான ஏற்பாட்டைச் செய்தவர் சட்டத்தரணி சுமந்திரன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன் மாத்திரமே கையொப்பமிட்டிருந்தார். மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. எஸ் சேனாதிராஜா. ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரின் பெயர்கள் ஒப்பம் எனப் பதிவிடப்பட்டிருந்தாலும் அதில் அவர்கள் கையொப்பமிடவில்லை.

சம்பந்தன் கையொப்பமிட்டதொரு நிலையிலேயே அந்தப் பரிந்துரை அடங்கிய நகல் யோசனைகள் கையளிக்கப்பட்டுமிருந்தது.

இந்தவொரு நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்றும், 13 தீர்வு அல்ல என்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோதே கூறியிருந்ததாகவும் சுமந்திரன் தற்போது கூறுகிறார்.

மஹிந்த ராஜபக்ஷகூட வேண்டாமென்று கூறிய 13 ஐ நடைமுறைப்படுத்தத் தமிழ்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூடிப் பேசுவதாகவும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கிண்ட லாகப் பேசிய காணொளி சமூகவலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. 13 ஐ நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் அனுப்ப ஏற்பாடு செய்கின்றனர் என்றும் சுமந்திரன் அந்தக் காணொளியில் சொல்கிறார்.

ஆனால் கடந்த மாதம் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்திய சுமந்திரன் தலைமையிலான குழுவில் நிர்மலா சந்திரகாசன் உள்ளடங்கியிருந்தார். 13 ஆவது திருத்தச் சட்டம் வினைத்திறன் கொண்டது எனவும் 13 ஐ விட தமிழர்களுக்கு வேறு தீர்வு அவசியமில்லையெ னவும் நிர்மலா சந்திரகாசன் கட்டுரை எழுதியிருந்தார். கொழும்பில் இருந்து வெளிவரும் ஐலண்ட் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அந்தக் கட்டுரையை நிர்மலா சந்திரகாசன் எழுதியிருந்தார்.

புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க அரசாங் கம் அனைத்துக் கட்சிகளிடமும் யோசனைகளைப் பெற்றிருந்தவேளையில் நிர்மலா சந்திரகாசனின் அந்தக் கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

அத்துடன் சுமந்திரன் குழுவினர் அமெரிக்காவில் இருந்து கொழும்பு திரும்பிய ஒரு சில நாட்களில் அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர், இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமென்றும் அது அதிகாரப் பகிர்வின் ஊடாகவும், பிரிக்கப்பட முடியாத இலங்கை என்ற அடிப்படையில் அமைய வேண்டு மெனவும் கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

அவர்களின் அந்தக் கூற்று, ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை மறுப்பதாகவும், சமஷ்டிக் கோரிக்கையை நீக்கம் செய்வதாகவுமே அமைந் திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், சுமந்திரன் 13 பற்றிக் கூடிப் பேசுவோர் மீது காரசாரமாக ஏசுவதன் ஊடாகவும் இந்தப் 13 ஐ பெறவா தமிழர்கள் இவ்வளவு உயிர் தியாகங்களைச் செய்தார்கள் எனவும் வினா எழுப்பியிருந்தமை எந்த அடிப்படையில் என்ற சந்தேகங்கள் உண்டு.

கடந்த நவம்பர் மாதம் இரண்டாம் திகதி செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் யாழ் திண்ணையில் இடம்பெற்ற 13 பற்றிய கலந்துரையாடலும், கொழும்பில் நடந்த கலந்துரையாடலும் இந்தியா விரும்புகின்ற 13 தான் அரசியல் தீர்வு என்பதைக் கோடிட்டு காட்டுகின்றது.

சுமந்திரனின் அமெரிக்கப் பயணமும் அந்தப் பயணத்தின் பின்னர் அமெரிக்க ஆளும் மற்றும் எதிர்த் தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர் வெளியிட்ட கருத்தும் 13 போன்றதொரு அதிகாரப் பரவலாக்கமே தீர்வு என்பதைப் பறை சாற்றுகின்றது.

ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் இரண்டு அணிகளாகப் பிரிக்கப்பட்டு அது நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதுதான் வேடிக்கை.

இலங்கை அரசிடம் இருந்து தங்கள் புவிசார் அரசியல் நலன்களைப் பெறும் நோக்கில், அமெரிக்க- இந்திய அரசுகள் வகுத்துள்ள வியூகத்தைப் புரிந்து கொள்ளாத அல்லது தெரிந்தும் தமது சொந்த நலன் அடிப்படையில் இயங்குகின்ற இந்தத் தமிழ்த்தேசியக் கட்சிகள், இலங்கை ஒற்றையாட்சி அரசு என்ற கட்டமைப்புக்குள் அமுங்கிவிட்டனர்.

ஈழத்தமிழர்கள் ஒரு தேசமாக எழக்கூடாது என்ற நோக்கில் கையாளப்படும் பிரித்தாளும் தந்திரங்களை இவர்கள் அறியாதவர்களும் அல்ல. ஆனால் தமிழர்கள் ஒரு தேசம், அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை வெளிப்படுத்தி அதற்கான அங்கீகாரத்தைச் சர்வதேசத்திடம் கோருவதற்கான தற்துணிவற்றவர் களாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.

செல்வம் அணி 13 என்று கூறியும், சுமந்திரன் அணி உள்ளகச் சுயநிர்ணய உரிமை என்று சொல்லியும் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்புகள் இருந்து வரக்கூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கு மாத்திரமே வழி சமைத்துள்ளனர்.

இந்த அதிகாரப் பரவலாக்கத்தைக் கொழும்பில் உள்ள மத்திய அரசு எந்த நேரத்திலும் மீளப் பெறக் கூடியது என்பதற்குப் 13 இல் இருக்கும் குறைந்தபட்ச காணி, பொலிஸ் அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டமை தகுந்த உதாரணங்களாகும்.

முதலமைச்சராகப் பதவி வகித்திருந்தபோது இதனை அனுபவத்தில் புரிந்து கொண்ட விக்னேஸ்வரன்கூடப் பின்னாளில் சமஷ்டிதான் தீர்வு என்று பகிரங்கப்படுத் தியிருந்தார். ஆனால் தற்போது 13 பற்றிப் பேசுகிறார்.

சுமந்திரன் அமெரிக்காவுக்கு வேறொரு குழுவாகச் சென்று பேசிய பிரதான அணுகுமுறைக்குக் காரணம் என்னவென்றால், இலங்கை அரசு அமெரிக்க- இந்திய அரசுகளை தனித்தனியாகக் கையாள முற்பட்டுள் ளமையே.

இலங்கை அவ்வாறான நிலைப்பாட்டை எடுத்ததால் அமெரிக்காவும் இந்தியாவும் தவிர்க்க முடியாதவொரு சூழலில் இலங்கை விவகாரத்தில் தனித்தனியாகச் சில வேலைத்திட்டங்களைச் செய்வதற்குத் தள்ளப்பட் டுள்ளன.

எனவே இந்த விவகாரம் தனித்தனியாகக் கையாளப் படுகின்றது என்றவொரு மாயைத் தோற்றம் உருவாகி இது போட்டியாகக் கையாளப்படலாமென்றும் தமிழர் தரப்பில் பேசப்படுகின்றது.

ஆனால் தேசம், சுயநிர்ணய உரிமை என்று மார் தட்டிக் கொண்டு, கடந்த பொதுத் தேர்தலில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் போன்றவர்க ளைக்கூட அரவணைத்துத் தேச அரசியலுக்கான கட்டு மானங்களைச் செய்ய முடியாதவர்களாக உள்ளனர். ■




# நியூசிலாந்தில் கருணைக்கொலை சாத்தியமாகின்றது

■ நியூசிலாந்து சிற்சபேசன்

அண்மையிலே நியூசிலாந்தில் கருணைக்கொலை (யூத்தனேசியா) சட்டபூர்வமாகியுள்ளது. சிகிச்சையினால் குணப்படுத்த முடியாத நிலையில், சுயதெரிவின் அடிப்படையில், உயிர்துறப்பதற்கான ஏற்பாடே கருணைக்கொலை எனப்படுகின்றது. சுயதெரிவு சட்ட வரையறைகட்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பது நிபந்தனையாகும்.

கருணைக்கொலை என்னும் சொற்பதமே நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது. அதிலே கொலை என்னும் சொல் கடுமையானதாகும். கருணை என்ற சொல்லை முன்னாலே சேர்த்துக்கொண்டாலுமேகூட கனதி குறையவில்லை.

ஒரு உயிரை, அதனுடைய விருப்பத்திற்கு மாறாக மாய்த்தலையே கொலை என்னும் சொற்பதம் வரையறுக்கின்றது. அஃது மனிதர்களை மட்டுமே குறிப்பதில்லை. உயிருள்ள அனைத்துக்குமே பொருந்தக்கூடியதாகும். ஆயுதத்தால் தாக்கி, வெட்டி, குத்தி, அடித்து, துன்புறுத்தி, நஞ்சூட்டி என ஏதோவொரு வகையிலே

> **நியூசிலாந்தில் கருணைக் கொலையை சட்டபூர்வமாக்கும் முயற்சி ஆரம்பமாகி கால்நூற்றாண்டு கடந்துவிட்டது. இதற்கு முன்னர், இரண்டு தடவைகள் கருணைக் கொலை தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், கருணைக்கொலைக்கு ஆதரவான பொதுசன அபிப்பிராயம் கடந்த இருபது ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருக்கின்றது.**

பலாத்காரமாக உயிரைப் பிரித்துவிடுவதே கொலையாகும். அஃது ஒரு குற்றச்செயலாகவே கருதப்படுகின்றது. அதனாலேயே பிறிதொருவரையும் கொல்லாத ஒருவரையே, எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழக்கூடிய, இறைவனாகத் திருவள்ளுவர் அடையாளப்படுத்துகின்றார். அந்தவகையிலேயும்கூட, கொலை என்னும் சொல் குரூரமான செயலையே சுட்டுகின்றது. அதனாலேயே கருணைக்கொலை என்னும் சொற்பதம் நெருடலை ஏற்படுத்துகின்றது.

இருந்தபோதிலும், நடைமுறைப் பாவனையைக் கவனத்தில்கொண்டு, கருணைக்கொலை என்னும் சொற்பதமே இந்தப்பத்தியிலேயும் பயன்படுத்தப்படுகின்றது.

கருணைக்கொலை என்பது, சுயதெரிவின் அடிப்படையிலே உயிரைச் செயற்கையாகத் துறப்பதை அனுமதிக்கும் சட்ட ஏற்பாடு என்ற புரிதலே நியூசிலாந்தில் காணப்படுகின்றது. சிகிச்சைபலனளிக்காத சூழ்நிலையில், உச்சப்பட்சமான வலி அல்லது துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான ஏற்பாடு என்றும் வியாக்கியானப்படுகின்றது. ஒரு நோயாளியின் சுயதெரிவின் பேரில், மருத்துவ உதவியுடன், வாழ்க்கையை முடித்துக் கொள்வது என்றும் புரிந்து கொள்ளப்படுகிறது.

அறம்வயப்பட்ட, யதார்தமான சிந்தனை கொண்ட சமூகமாகவே நியூசிலாந்து கருதப்படுகின்றது. முதலிலே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு. அணுவாயுதம் தொடர்பிலான தீர்க்கமான நிலைப்பாடு கொண்ட நாடு. கொரோனாப் பேரிடர் தொடர்பான அணுகுமுறையில் பரவலாகக் கவனிக்கப்பட்டநாடு. ஆனாலும், கருணைக்கொலை விடயத்திலே தீர்மானமெடுக்கத் திணறியது. பெல்ஜியம், கனடா, அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் சில மாநிலங்கள் முன்னுதரணமான வகையிலே வேகமாகவே தீர்மானமெடுத்துவிட்டன. 2021ம் ஆண்டிலேயே நியூசிலாந்தினால் அந்த இடத்துக்கு வரமுடிந்திருக்கின்றது.

நியூசிலாந்தில் கருணைக்கொலையை சட்டபூர்வமாக்கும் முயற்சி ஆரம்பமாகி கால்நூற்றாண்டு கடந்துவிட்டது. இதற்கு முன்னர், இரண்டு தடவைகள் கருணைக்கொலை தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், கருணைக்கொலைக்கு ஆதரவான பொதுசன அபிப்பிராயம் கடந்த இருபது ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருப்பதாகவே கருதமுடிகின்றது.

கருணைக்கொலை தொடர்பிலான விவாதங்கள் பெரும்பாலும் சமய நம்பிக்கை, மனிதவுரிமை, காருண்யம் போன்றவற்றின் அடிப்படையிலேயே அமைந்தன. பாராளுமன்றத்தில் கூட கட்சி சார்ந்த முடிவை அரசியல் கட்சிகள் எடுப்பதில்லை. மாறாக, மனச்சாட்சியின் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமையை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கின. சிறுகட்சி உறுப்பினரொருவரின் தனிப்பட்ட சட்டமூலமாகவே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் பாராளுமன்ற விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டது. சுமார் நான்கு ஆண்டுகள் வரையில் சட்டமூலத்தின் உள்ளடக்கம் அலசி ஆராயப்பட்டது. அதன் பின்னரேயே பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் பொதுசன வாக்கெடுப்பொன்றில் மக்களின் தீர்ப்பு கோரப்பட்டது. அதிலே சுமார் 65விழுக்காடு மக்கள் கருணைக்கொலை சட்டமாக்கப்படுவதை ஆதரித்து வாக்களித்தனர்.

கருணைக்கொலை தொடர்பில் கடுமையான சட்ட ஏற்பாடுகளை நியூசிலாந்து வகுத்திருக்கின்றது. விண்ணப்பதாரருக்கான வரைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஒருவர் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். நியூசிலாந்து பிரஜாவுரிமை அல்லது வதிவிடஉரிமம் கொண்ட வராக இருக்கவேண்டும். சிகிச்சையினால் குணப்ப டுத்த முடியாதநிலையில் இருக்கவேண்டும். அத்துடன் ஆறுமாதங்க ளுக்குக் குறைவாக வாழக் கூடிய சூழ்நிலை கொண்ட வராகவும் இருக்கவேண் டும். கூடவே, சிகிச்சையினால் குணப்படுத்தமுடி யாத நோயினால் உச்சப்பட்ச வலியை அனுபவிப்பவராகவும், மருத்துவ வழிமுறைகளில் தற்காலிக நிவாரணமேனும் ஏற்படுத்தப்பட முடியாதவராகவும், சுயமாக தீர்மானமெடுக் கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். வயதுமூப்பு, அங்கவீனம் அல்லது உளவியல் பாதிப்பு போன்ற கார ணங்களின் அடிப்படையில் கருணைக்கொலைக்கு விண் ணப்பிக்க முடியாதென வரையறுக்கப்பட்டுள்ளது. முத் தாய்ப்பாக, கருணைக் கொலை விண்ணப்பம் தொடர் பில் முன்கூட்டியே திட்டமிடமுடியாது என சட்டம் அறுதியாக வரையறுக்கின்றது. ஆக, கருணைக் கொலைக்கு விண்ணப்பிப்பதற்கான விதிமுறைகள் தெளிவாகச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

சமூகத்திலே கருணைக்கொலை இயல்பான நடைமுறைக்கு வருவதற்கு பல ஆண்டுகள் ஆகலாம். அவ்வாறான நிலை ஏற்படுகின்ற போது, ஆண்டொன்றில் ஏற்படுகின்ற மொத்த இறப்புக்களில், இரண்டு விழுக்காடு வரையானோர் கருணைக்கொலை வழியாக இறப்பை எதிர்கொள்ளலாம் எனக் கணிக்கப்படுகின்றது.

கருணைக்கொலை தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் காணப்படுகின்றன. மதம்சார்ந்த நம்பிக்கை. மனிதம் சார்ந்த நம்பிக்கை. கருணை அடிப்படையிலான பரிவு. தனிமனிதசுதந்திரம் எனப் பல்வேறு கோணத்திலான பார்வைகள் காணப்படுகின்றன. அவை ஒன்றுடனொன்று தொடர்புடையதாகவும், சிலவேளைகளில் ஒன்றுடனொன்று மோதல்போக்கைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. தன்னுடைய உயிரை மாய்த்துக்கொள்கின்ற உரிமை தனிமனித சுதந்திரத்தின் மகுடம் என்கின்றனர் ஒருசாரர். இறைவன் அளித்த அற்புதமான உயிரை மாய்ப்பது மனிதகுலத்துக்கே விரோதமானது எனச் சினக்கின்றனர் மற்றொரு சாரர். சுயத்தை மையப்படுத்திய மேற்கத்தைய வாழ்வு முறையில் “நான்” “எனது” என்பவையே முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. சுயதெரிவு என்னும் கருத்தியலின் பிரமாண்டத்தில் மற்றைய அனைத்துமே காணாமல் ஆக்கப்பட்டுவிடுகின்றன.

கருணைக்கொலையை வலியுறுத்திப் பிரச்சாரங்கள் நடைபெற்றன. மறுவளத்தில், அதற்கு எதிரான பிரச்சாரங்களும் நடைபெற்றன. சிகிச்சையினால் குணப்படுத்த முடியாதநிலையைத் தொடுகின்றவர்களுக்கு வலி நிவாரணத்தை வழங்கவேண்டும். இயல்பாக உயிர் பிரிவதற்கு துணைசெய்யவேண்டும். அதைவிடுத்து, கருணைக்கொலையைச் சட்டபூர்வமாக்கக்கூடாது என்னும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இருந்தபோதிலும், பொதுசனவாக்கெடுப்பில் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாகியது. ■



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்
நேரம் : 1 மணித்தியாலம்

**27.** ஒரு தேயிலைத்தோட்டத்தில் முதல் நாளில் 39kg 900g தேயிலைக் கொழுந்தும் இரண்டாம் நாளில் 55kg 850 g தேயிலைக் கொழுந்தும் பறிக்கப்பட்டது. இரு நாட்களும் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

**28.** 150g பருப்பின் விலை ரூபாய் 36.00 ஆகும். எனின் 1kg பருப்பு வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

..............................................................

**29.** தரம் 5 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் நிறங்கள் தொடர்பான விபரம் வரைபில் தரப்பட்டுள்ளது.







**(i)** பச்சை நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கை சிவப்பு நிறத்தை விரும்புவோரின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். அதனை நிழற்றிக் காட்டுக.

**(ii)** தரம் ஐந்து வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

- **30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** சூரிய நமஸ்காரப் படிமுறையில் 3ஆம், 4ஆம், 5ஆம் படிமுறையாக அமைவது

(1)  (2)  (3) 

**31.** நான் சுவாசிக்கும் ஒலியையும் நன்றாகச் செவிமடுக்கின்றேன். எனக்கு இப்போது எனது இதயத்தின் ஒலி மட்டுமே கேட்கிறது. ஆம் எனது உள்ளம் அமைதியடைந்துள்ளது. எனது உடலும் உள்ளமும் அமைதியடைந்துள்ளன. இக் கூற்று

(1) உள்ளத்தைத் தளர்த்துதல் (2) பிரார்த்தனை (3) உடலைத் தளர்த்துதல்

**32.** ஆணிவேர் காணப்படும் தாவரத் தொகுதி எது?
(1) பனை, தென்னை, கமுகு, நெல்
(2) பலா, வேம்பு, கொய்யா, முதிரை
(3) இலுப்பை, கமுகு, கித்துள், கடைச்சி

**33.** இலுப்பை, கொன்றை ஆகியவை பூக்கும் மாதம்
(1) பங்குனி மாதம் (2) ஆவணி மாதம் (3) கார்த்திகை மாதம்

**34.** பின்வரும் பண்புகளைக் கொண்ட வித்து பரவலடையும் முறை யாது?
- கொழுக்கி போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.
- ஒட்டும் தன்மை காணப்படும்.
- சுவையான சதைப்பகுதியைக் கொண்டிருக்கும்.

(1) நீரினால் பரவலடைகின்றது.
(2) காற்றினால் பரவலடைகின்றது.
(3) விலங்கினால் பரவலடைகின்றது.


**35.** வறள்நிலப் பிரதேசங்களில் வளரும் தாவரங்களைக் கொண்ட தொகுதி
(1) வாழை, கமுகு, கங்கூன்
(2) பிரண்டை, கள்ளி, கற்றாளை
(3) தென்னை, இலந்தை, கொகில

**36.** செயற்பாடு ஒன்றிற்காக தரம் 5 மாணவர்கள் திறந்த வெளியில் காணப்பட்ட புல்லினை தகரம் ஒன்றினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தனர். அப்போது அவர்களால் அவதானிக்க முடிந்தது யாது?
(1) புற்கள் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
(2) புற்கள் கரும் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
(3) புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.

**37.** பின்வருவனவற்றுள் ஈருடக வாழி எது?
(1) ஆமை (2) முதலை (3) தவளை

**38.** இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது?
(1) சுண்டெலி (2) கலவத்தன் (3) வரிக்குதிரை

## *விடைகள்*

| | | |
|---|---|---|
| 27. | 95 kg 750 g / 95750 kg | |
| 28. | ரூபாய் 240.00 | |
| 29. | (i) 25ஐக் குறிக்குக<br>(ii) 130 மாணவர்கள் | |
| 30. | (3) |  |
| 31. | (1) | உள்ளத்தைத் தளர்த்துதல் |
| 32. | (2) | பலா, வேம்பு, கொய்யா, முதிரை |

| | | |
|---|---|---|
| 33. | (2) | ஆவணி மாதம் |
| 34. | (3) | விலங்கினால் பரவலடைகின்றது. |
| 35. | (2) | பிரண்டை, கள்ளி, கற்றாளை |
| 36. | (3) | புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்ப |
| 37. | (3) | தவளை |
| 38. | (3) | வரிக்குதிரை |

# 32 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

## மோசமான நிலைமையைச் சுட்டிக்காட்டுகின்றார் ராஜித

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் 32 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், விஷப் பாம்பு தீண்டினால் ஏற்றப்படும் ஊசி மருந்துகூட இல்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் 52 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றன என்று பாராளுமன்றத்தில் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தேன். அவற்றில் 32 வகையானவை அத்தியாவசிய மருந்துகளாகும். புதிய நிலைவரம் மோசமாக உள்ளது. தட்டுப்பாட்டு நிலைமை அதிகரித்துள்ளது. ஆனால், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என அச மருந்தாக்கல் கூட்டுதாபனம் கூறுகின்றது. உண்மை நிலை வரம் மருந்து களஞ்சியப் பிரிவுக்கே தெரியும்.

குறிப்பாக விஷப் பாம்பு தீண்டினால், நோயாளி வைத்தியசாலைக்குக் கொண்டுவந்த உடனேயே அவரின் உயிரைப் பாதுகாப்பதற்கு ஏற்றப்படும் ‘என்டி வெனம்’ என்ற ஊசி மருந்துகூட இல்லை. எனவே, விஷப் பாம்பு தீண்டி வைத்தியசாலைக்கு சென்றால் உயிரிழக்க வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

உரப்பிரச்சனையால் விவசாயிகள் விவசாயம் செய்வதில்லை. வயல் நிலங்கள் காடாகியுள்ளது. தேயிலைத் தோட்டங்களும் காடாகியுள்ளன. எனவே, இனி பாம்பு தீண்டல்களும் அதிகரிக்கும். ஆனால், நாட்டில் அதற்கான மருந்து இல்லை டொலர் இல்லை என்கின்றனர். இந்நிலையில், அமைச்சர்கள் சுற்றுலா செல்கின்றனர்” - என்றார். (இ)



# பதில் நிதி அமைச்சருடன் இந்தியத் தூதுவர் பேச்சு

கொழும்பு, டிசெ. 18

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே பதில் நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளியுறவு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவு தொடர்பிலும், வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், இரு தரப்புக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பான பல விடயங்கள் மற்றும் அண்மையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் பெறுபேறுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ)

# ராஜபக்ஷ, சஜித் அணிகளுடன் கூட்டணி அமைக்கவேமாட்டோம்

## ஜே.வி.பி. அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 18

**“பிரதான கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம்.”**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“ஆட்சியைப் பிடித்து பதவிகளைப் பங்கிடுவதற்காகவே கடந்த காலங்களில் கூட்டணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது சம்பிரதாய நடவடிக்கையாகவும் மாறியுள்ளது. இந்தக் கூட்டணி கோட்பாடு எமக்குப் பொருந்தாது.

தேசிய மக்கள் சக்தியும் கூட்டமைப்புதான். அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் அங்கம் எமது கூட்டணியில் அங்கம் வகிக்கின்றனர். எமது கூட்டணிக்கான ஆதரவு பெருகி வருகின்றது. எனவே, பிரதான கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் இரண்டு தரப்புகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாம் கூட்டணி அமைக்கமாட்டோம்” - என்றார். (இ)

# இலங்கையில் ‘ஒமைக்ரோன்’ விசாரணை வேட்டை தீவிரம்

கொழும்பு, டிசெ. 18

‘ஒமைக்ரோன்’ வைரஸ் தொற்றியவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு விரிவான விசாரணை வேட்டையை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் ஒமைக்ரோன் வைரஸ் தொற்றிய மூவர் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் இருவர் இலங்கையர்கள் ஏனைய ஒருவர் வெளிநாட்டவர்.

இந்நிலையிலேயே, அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தவர்களைக் கண்டறியும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையில் இதுவரை 4 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ)

# 2022இல் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கடும் நடவடிக்கை

## கிரியெல்ல எம்.பியும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 18

“2022ஆம் ஆண்டு மார்ச்சில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர்பில் இலங்கை தொடர்பில் இம்முறை கடுமையான நடவடிக்கை எடுக்கப்படலாம்.”

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

“சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை போன்ற நாடுகளால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் முக்கியமானதொரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தேன். அதாவது மண்டேலாவின் வழி , முகாபேயின்



வழியென இரண்டு வழிகள் உள்ளன. மண்டேலாவின் வழியை தெரிவுசெய்யுமாறு கோரினேன். ஆனால், முகாபேயின் வழியையே மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்தார். இதன் விளைவு என்ன? ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2015 மார்ச்சில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அச்சத்தாலேயே முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அவர் தோல்வியைச் சந்தித்தார்.

தற்போதைய அரசும் இதே வழியில்தான் பயணிக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நாட்டுக்கு தோல்வி ஏற்படுகின்றது. சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக்கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின்போது நாம் அதனைச் செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மஹிந்தவைப் பாதுகாத்தோம்.

ஆனால், இந்த அரசால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாதுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டும் கூடவுள்ளது. இம்முறை அதனை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை.

இம்முறை தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கமாட்டார்கள் நடைமுறைக்கு சாத்தியமான நடவடிக்கையில் இறங்குவார்கள். ஏனெனில் தீர்மானம் நிறைவேற்றி பயனில்லை என்பதை அறிந்துள்ளனர். இது தொடர்பில் நான் வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளேன்” - என்றார். (இ)

# நாட்டில் ஆறுகளை அண்மித்த வீடுகளை அகற்ற நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் ஆறுகளை அண்மித்துள்ள வீடுகளை அகற்றி அவற்றைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர், நதிகளை மாசுபடுத்துவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 733 ஆறுகள் மாசடைந்துள்ளன எனவும், அவற்றில் 1,474 இடங்கள் களனி ஆற்றை மாசு



படுத்தும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி இம்முறை “சுரகிமு கங்கா“ (நதிகளைப் பாதுகாப்போம்) திட்டத்தின் கீழ் களனி ஆற்றைச் சுத்தப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



# மருத்துவமனையில் தீ; 27 பேர் உயிரிழந்தனர்!

## ஜப்பானில் நேற்று காலை துயரம்

ரோக்கியோ, டிசெ. 18

ஜப்பான் - ஒசாகா நகரத்தின் மருத்துவமனை கட்டடம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் வரை உயிரிழந்தனர் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்துக்கு சதிச் செயல் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜே. ஆர். ஒசாகா நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள எட்டு மாடிகள் கொண்ட கட்டடத்தின் நான்காவது மாடியில் ஜப்பானிய நேரப்படி நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10:20 மணியளவில் தீ விபத்து உள்ளூர் தீயணைப்புத் துறைக்கு தகவல் கிடைத்தது.

சுமார் 20 சதுர மீற்றர் பரப்பளவில் தீ பற்றி எரிந்தது. அங்கு விரைந்த தீயணைப்பு துறையினர் 25 நிமிட கடும் போராட்டத்தின் பின்னர் 10:45 மணியளவில் தீயை அணைத்தனர்.

கட்டடத்தின் நான்காவது மாடியில் உள்ள மருத்துவமனையிலேயே தீப்பிடித்தது. இங்கு மனோதத்துவ மற்றும் மனநல சிகிச்சை வழங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# வடகொரியாவில் துக்க தினம்; சிரித்தால் சிறை தண்டனை!

பியோங்யாங், டிசெ. 18

வடகொரியாவில் சிரித்தால், மது அருந்தினால், பிறந்த நாள் கொண்டாடினால் அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அந்தநாட்டின் முன்னாள் தலைவர் கிம் ஜோங் இல்லின் நினைவு தினம் நேற்றாகும். இதை முன்னிட்டு துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே இந்தக் கட்டுப்பாடுகளை அரசு விதித்துள்ளது.

கிம் ஜோங் இல்லின் 10ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பத்து நாட்கள் வடகொரியாவில் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இதன்படி, வரும் பத்து நாட்களில் குடிமக்கள் மது அருந்தக் கூடாது, சிரிக்கக்கூடாது, விருந்து விடுதிகளுக்கு செல்லக்கூடாது போன்ற கட்டுப்பாடுகளை வடகொரிய அரசு விதித்துள்ளது" என்று செய்தி வெளியிட்டுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத வடகொரியவாசி ஒருவர் கூறும் போது, "துக்க காலத்தில் உங்கள் குடும்ப உறுப்பினர் இறந்தாலும், நீங்கள் சத்தமாக அழக் கூடாது. துக்க தினம் முடிந்த பிறகுதான் உடலை வெளியே எடுக்க வேண்டும். துக்க காலத்திற்குள் தங்கள் பிறந்தநாளைக் கூடக் கொண்டாடக்கூடாது. மது அருந்தக்கூடாது. மீறினால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள்" என்று தெரிவித்தார்.

கிம் ஜோங் இல் தனது 69 வயதில் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி மாரடைப்பால் காலமானார். ஒவ்வொரு வருடமும் கிம் ஜோங் உன் தனது தந்தை நினைவு நாளின்போது காலையிலேயே அஞ்சலி செலுத்துவது வழக்கம். இந்த நிலையில் இந்த ஆண்டு கிம் அஞ்சலி செலுத்துவது தொடர்பாக செய்திகள் எதையும் வடகொரிய ஊடகங் கள் இது வரை வெளியிடவில்லை. (ஐ)

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்; தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவிப்பு!

மொஸ்கோ, டிசெ. 18

அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்புடன் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதுதொடர்பான வரைவு ஆவணம் அமெரிக்க அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் மேற்கொண்டு உடனடியாகப் பேச்சு நடத்துவதற்காக சிரேஷ்ட தூதரக அதிகாரி ஒருவர் அமெரிக்கா செல்லத் தயாராக உள்ளார் என ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ள தயாராக



இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரைன் ரஷ்யாவின் எல்லையொட்டி அமைந்துள்ளது. சுமார் 30 வீதத்தினர் அங்கு ரஷ்ய மொழி பேசுவோராக உள்ளனர். இந்நாட்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு அதிகரிப்பது தனது பாதுகாப்புக்கு ஆபத்து என ரஷ்யா கருதுகிறது.

ரஷ்ய ஆதரவு நாடாக இருந்த உக்ரைன் 2013இன் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு கட்சியால் ஆளப்படுகின்றது. இந்நிலையில், உக்ரைனின் கிரீமியாவை கைப்பற்றிய ரஷ்யா தனது பகுதியாக இணைத்து அறிவித்தது. இந்நிலையில், இப்போது உக்ரைன் எல்லையில் அதிக படைகளை குவித்துள்ள ரஷ்யா அந்த நாட்டை கைப்பற்ற முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்நிலையில், அமெரிக்க, ரஷ்ய ஜனாதிபதிகள் அண்மையில் மெய்நிகர் வழியில் பேச்சு நடத்தினர். 7ஆம் திகதி நடந்த இந்தப் பேச்சில் பாதுகாப்பு தொடர்பான எந்த முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில், அமெரிக்கா மற்றும் நேட்டோவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்வதற்கான ஆவணங்களை ரஷ்யா சமர்ப்பித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. (ஐ)

# கென்னடி கொலை; ஆவணங்கள் வெளியீடு!

வாஷிங்டன், டிசெ. 18

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எவ் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான 1,500 இரகசிய ஆவணங்களை அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எவ் கென்னடி டல்லாசில் 1963 நவம்பர் 22,ல் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக லீ ஹார்வே ஒஸ்வால்ட் என்பவர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரணைக் குழு விசாரணை நடத்தியது. இந்த கொலை தொடர்பான முக்கிய இரகசிய ஆவணங்களை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்படும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இதன்படி 1,500 ஆவணங்களை அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகம் வெளியிட்டு உள்ளது. கென்னடி கொல்லப்பட்டமை தொடர்பாக பல புதிய தகவல்கள் இதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல தகவல்களை அடுத்த சில மாதங்களில் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)



# ஜெசோரா பள்ளப் பாறையை இனங்கண்டது பெர்சவரென்ஸ்!

நியூயோர்க், டிசெ. 17

செவ்வாய் கிரகத்தில் உள்ள ஜெசெரோ என்ற பள்ளத்தை ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா அனுப்பிய பெர்சவரென்ஸ் விண்ணூர்தி செவ்வாய் கிரகத்தில் உள்ள பழமையான பாறைகளை கண்டறிந்து அவற்றை ஒளிப்படம் எடுத்து அனுப்பியுள்ளது.

இந்தப் பாறைகள் அடிப்படையில் எரிமலை தோற்றம் கொண்டவை. ஒருவேளை அவை எரிமலை குழம்பின் விளைவாக ஏற்பட்டதாக இருக்கக்கூடும் என விஞ்ஞானிகளால் கருதப்படுகிறது.

இந்த பாறைகளை பெர்சவரென்ஸ் விண்ணூர்தி கண்டறிந்து இருப்பது ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது. இந்தப் பாறைகளின் மாதிரிகள் பூமிக்கு கொண்டு வரப்படும்போது அவை எந்தக் காலத்தில் தோன்றியவை என்பதை கண்டு பிடித்து விட முடியும் என்று நம்பப்படுகிறது.

இது குறித்த ஆய்வுகள் செவ்வாய் கிரகம் மற்றும் அதற்கு அப்பாலும் உள்ள பரந்த அளவிலான சூரிய குடும்பத்தின் வரலாறு குறித்து எமக்கு ஒரு புரிதலை ஏற்படுத்தும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சீனாவின் ஜின்ஜியாங்கிலிருந்து பொருட்கள் இறக்குமதிக்கு தடை!

## அமெரிக்க காங்கிரஸ் சட்டமூலத்துக்கு அனுமதி

வாஷிங்டன், டிசெ. 18

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்திலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கும் சட்டமூலத்துக்கு அமெரிக்க காங்கிரஸ் நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஜின்ஜியாங் மாகாணத்தில் சிறுபான்மை உய்கர் இன முஸ்லிம் களை கட்டாய உழைப்பில் சீனா ஈடுபடுத்தி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்நிலையில், அந்த மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் கட்டாய உழைப்பு இல்லாமல் உற்பத்தி செய்யப்பட்டவை என தொழிலகங்கள் உறுதிப்படுத்தும் வரை இந்தத் தடை நீடிக்கும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க பாராளுமன்ற மேலவையான செனட் சபையில் இந்த சட்டமூலம் வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. இது ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவரின் ஒப்புதலின் பின்னர் சட்டமாகும்.

ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கர் இன முஸ்லிம் மக்களுக்கு எதிராக சீனா இன அழிப்பில் ஈடுபடுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. உய்கர் இன மக்களுக்கு கட்டாய கருத்தடை செய்து, அவர்களை முகாம்களில் அடைத்து கட்டாய உழைப்பில் ஈடுபடுத்துகிறது என்றும் அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

முன்னதாக, இதே குற்றச்சாட்டுக்காக சீனாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியை இராஜீய புறக்கணிப்பு செய்யப்போவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. இந்த நிலையில் புதிய தடைக்கு அமெரிக்க பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. (ஐ)

ஈழநாடு





# லபுசாக்னே அபார சதம் ஆஸி. வலுவான நிலை!

## இங்கிலாந்து தடுமாற்றம்

அடிலெய்ட், டிசெ. 18

லபுசாக்னேயின் அபார சதம் கைகொடுக்க முதல் இனிங்ஸில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 473 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது அவுஸ்திரேலியா.

அடிலெய்டில் நடக்கும் ஆஷஷின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 2 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லபுசாக்னே 95, ஸ்ரீவன் ஸ்மித் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்தபோது, அவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். 287 பந்துகளில் லபுசாக்னே 100 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் 6ஆவது சதமாகும். தொடர்ந்து ஆடிய அவர், 103 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஸ்ரீவன் ஸ்மித் 135 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். ஆனால், மறுமுனையில் விக்கெட்கள் வீழந்தன. எனினும், அலெக்ஸ் ஹாரி சற்று நிதானம் காட்டினார். இந்நிலையில் ஸ்மித் 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஹாரி 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

150.4 ஓவர்களில் 9 விக்கெட்களை 473 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பென் ஸ்ரோக்ஸ் 3 விக்கெட்களையும், ஜேம்ஸ் அண்டர்சன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே தடுமாற்றமாக இருந்தது. தொடக்க வீரர்களான ரொறி பேர்ன்ஸ் 4 ஓட்டங்களுடனும், ஹமீத் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது, 8.4 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவுஸ்திரேலிய அணியின் மிற்செல் ஸ்ரார்க், மைக்கல் நெசெர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (ஐ)

# கொழும்பு அணியை வீழ்த்தி யாழ்ப்பாணம் மெகா வெற்றி!

கொழும்பு, டிசெ. 18

கொழும்பு ஸ்ரார்ஸ் அணியை 102 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி.

எல். பி. எல். தொடரில் நேற்று முன்தினம் மாலை நடந்த போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ், கொழும்பு ஸ்ரார்ஸ் அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் அணி, முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்களை குவித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய காட்மோர் - உபுல் தரங்க இணை முதல் விக்கெட்டுக்காக 110 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது. உபுல் தரங்க 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த அஷான் ரந்திக 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த காட்மோர் 55 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரி கள் அடங்கலாக 93 ஓட்டங்களை பெற்று 16.1 ஓவ ரில் நவீன் உல்-ஹக்கின் பந்து வீச்சல் எல். பி. டபிள்யூ ஆனார்.

இறுதியாக யாழ்ப்பாணம் கிங்ஸ் 20 ஓவர் கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்களை பெற்றது.

194 ஓட்டங் கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணியால் எதிரணியின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

15.5 ஓவர்களில் 91 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அணி சார்பில் அதிகபடியாக ரொம் ன்டன் 30 ஓட்டங்களை பெற்றார்.

யாழ்ப்பாணம் அணி சார்பில் பந்துவீசிய ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்களையும், வியாஸ்காந்த் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# தம்புள்ளையை வென்றது கண்டி; இறுதி சுற்று வாய்ப்பு பிரகாசம்!

கொழும்பு, டிசெ. 18

தம்புள்ளை அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்ட கண்டி அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பை தக்க வைத்துள்ளது.

எல். பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் தம்புள்ளை ஜியாண்ட்ஸ், கண்டி வோரியர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ளை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களாக பிலிப் சால்ட் மற்றும் நிரோஷன் டிக்வெல்ல களமிறங்கினர். 11 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது. சால்ட் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க டிக்வெல்ல 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த வீரர்கள் வேகமாக விக்கெட்களை இழந்த நிலையில், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 130 ஓட்டங்களை சேர்த்தது தம்புள்ளை ஜியாண்ட்ஸ்.

அணி சார்பில் ரமேஷ் மெண்டிஸ் 41 ஓட்டங்களையும், ஜெயதிலக 34 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

கண்டி அணி சார்பில் பந்துவீசிய பினுர பெர்னாண்டோ, அல் - அமீன் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

131 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கிக் களமிறங்கிய கண்டி வோரியர்ஸ் முதல் விக்கெட்டை முதல் ஓவரிலேயே இழந்தது. சரித அசலங்க இம்ரான் தாகீரின் பந்து வீச்சில் நான்கு ஓட்டங்களுடன்



போல்ட் ஆகி வெளியேறினார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக கைகோத்த கென்னர் லூயிஸ் மற்றும் ரவி போபராவின் இணைப்பாட்டம் அணிக்கு கைகொடுத்தது. ஒரு கட்டத்தில் லூயிஸ் 27 (26) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்தடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்களுடன் களம் கண்ட ரவி போபரா ஆடுகளத்தில் நிலைத்து நின்றார்.

இதனால் 19.2 ஆவது ஓவரில் கண்டி வோரியர்ஸ் 4 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. ரவி போபரா 59 ஓட்டங்களுடனும் அஞ்சலோ பெரேரா 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ரவி போபரா தெரிவானார். (ஐ)

# மே. இ. தீவுகளுக்கு எதிரான தொடர்; முழுமையாக வென்றது பாகிஸ்தான்!

கராச்சி, டிசெ. 18

மேற்கிந்தியத் தீவுகள் அணியை தாயகத்தில் வீழ்த்தி தொடரை 0 - 3 என்ற கணக்கில் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

வியாழன் இரவு கராச்சியில் ஆரம்பமான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் நிர்ணயித்த 208 ஓட்டங்களை துரத்திய பாகிஸ்தான் 7 விக்கெட்களை இழந்து 18.5 ஓவர்களில் வெற்றி பெற்றது.

இருபது - 20 சர்வதேச போட்டிகளில் பாகிஸ்தான் அதிகபட்சமான ஓட்டத்தை துரத்தி வென்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்களை குவித்தது.

ஆர்ம்ப வீரர்களாக களமிறங்கிய பிரண்டன் கிங் 43 ஓட்டங்களையும், ஷமர் ப்ரூக்ஸ் 49 ஓட்டங்களையும் பெற அதன் பின் வந்த நிகோலஷ் பூரண் 64 ஓட்டங்களையும், டைரன் பிராவோ 34 ஓட்டங்களையும் ரோவ்மேன் பவல் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

208 என்ற கடின இலக்கை துரத்திய பாகிஸ்தான் அணிக்கு தொடக்க இணை நல்ல ஆரம்பத்தை கொடுத்தது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய அணித் தலைவர் பாபர் அசாம் மற்றும் மொஹமட் ரிஸ்வான் இணை 15 ஓவர்களில் 158 ஓட்டங்களை குவித்தனர்.

பின்னர் 15.1 ஆவது ஓவரில் பாபர் அசாம் 53 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகள் அடங்கலாக 79 ஓட்டங்களுடனும், 17.2 ஆவது ஓவரில் மொஹமட் ரிஸ்வான் 45 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 10 பௌண்ட்ரி஌டன் 87 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது வீராக களமிறங்கிய பக்கர் ஷமான் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், பின்னர் ஆசிஃப் அலி 7 பந்துகளில் 2 சிக்ஸர், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றியை 18.5 ஆவது ஓவரில் உறுதி செய்தார். (ஐ)



# ஆணின் சடலம் மீட்பு



பசறை, டிசெ. 18

பசறையில் நேற்று ஆண் ஒரு வரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

பசறை நகரிலிருந்து மடூல் சீமைக்குச் செல்லும் வீதியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத் தில் கள்ளுக் கடைக்குச் செல் லும் ஒற்றையடிப்பாதையி லேயே 60 முதல் 65 வயது மதிக் கத்தக்க ஆணின் சடலம் இவ் வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சுமார் இரண்டு மணி நேரம் அவ்விடத்திலேயே விழுந்து கிடந்தார் எனவும், அவ்வழியில் செல்பவர்களால் அவசர நோயாளர் காவு வண்டி சேவைக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்ற அவசர நோயாளர் காவு வண்டி ஊழியர்களால் குறித்த நபர் மரணித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பசறை பொலிஸார் மரணித்த நபரிடமிருந்து மின் கட்டண பற்றுசீட்டு ஒன்றை மீட்டெடுத்தனர்.

பற்றுச்சீட்டில் பசறை, புஹூல்வத்தைப் பகுதி என விலாசமிடப்பட் டிருந்தமையைத் தொடர்ந்து மரணித்த நபர் புஹூல்வத்தைப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கருதிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பயணக் கட்டுப்பாடு தளர்வு குறித்து சுகாதார பரிசோதகர்கள் அதிருப்தி!

## ஒமைக்ரோன் பரவலால் நாடு அழிவை சந்திக்கக்கூடும் எனவும் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 18

**“பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களைத் தளர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளமையானது ஏதாவது அழுத்தங்களுக்கு அடிபணிந்தா என்பது தொடர்பில் சந்தேகம் எழுகின்றது.”**

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஒமைக்ரோன் உள்ளிட்ட வைரஸ் பிறழ்வுகளின் பரவல் அதிகரித்துள்ளதால், நாடு எதிர்காலத்தில் ஆபத்தை - அழிவைச் சந்திக்கக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள் ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் கண்டறியப்படும் சூழலில் பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடிக்காமல் செயல்படும்போது நாடு பாரிய அவதான நிலையை நோக்கி செல்லக்கூடும்.

இந்தப் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட சட்டங்களை மேலும் தளர்த்துவது எவ்வளவு நியாயமானது மற்றும் நடைமுறையானது என்ற கடுமையான கேள்வி எழுகின்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அதிகாரிகள் கொரோனாத் தொற்றுநோய் குறித்த தரவுகளின் அடிப்படையில் இந்தத் தளர்வைச் செய்துள்ளனரா? அல்லது யாருடையதாவது அழுத்தங்கள் காரணமாக இவற்றைச் செய்கின்றனரா? என்ற பாரிய பிரச்சினை எங்களுக்கு உள்ளது.

எவ்வாறாயினும், கொரோனா தொற்றுநோய் எதிர்காலத்தில் நாட்டில் அழிவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இந்நிலையில், பண்டிகைக் காலத்தைப் பொதுமக்கள் கொண்டாடிய பின்னர் அதிகளவில் நோயாளிகள் பதிவாக வாய்ப்புண்டு. இப்போதும் கூட, ஊடகங்கள் மற்றும் உத்தியோக பூர்வ புள்ளிவிவரங்களை விட அடிமட்ட அளவில் அதிக நோயாளிகள் பதிவாகி வருகின்றனர்” - என்றார். (இ)

# இராணுவத்தை எங்கள் அரசு முழுமையாக நம்புகின்றது

## ஆளுங்கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 18

“எமது அரசு இராணுவத்தை நம்புகின்றது. எதிர்காலத்திலும் இராணுவத்தின் ஒத்துழைப்பு பெறப்படும். அதேபோல குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படும் எதிரணிக்கு அதற்கான வாய்ப்பை வழங்கமாட்டோம்.” என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாடு இராணுவத்திடம் கையளிக்கப்படுகின்றதென எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார். எமது அரசு இராணுவத்தை நம்புகின்றது. இதனால்தான் ஜேஆர், பிரமேதாஸ, ரணில் போன்றவர்களால் முடியாமல்போன, யுத்தத்தை எம்மால் முடிவுக்கு கொண்டுவரமுடிந்தது.

அதேபோல கொரோனா பெருந்தொற்றின்போது தடுப்பூசி திட்டம் வெற்றியளிக்க சுகாதார துறையினருக்கு இராணுவத்தினர் பெரும் பங்களிப்பை வழங்கினர். எதிர்காலத்திலும் தேவைகளின் நிமித்தம் ஒத்துழைப்பை பெறுவோம். இதனால் மக்கள் பிரதிநிதிகளின் கௌரவம் பாதிக்கப்படாது. அபிவிருத்தி நடவடிக்கைக்கு இராணுவத்தை பயன்படுத்துவது தவறு கிடையாது.

அதேவேளை, இந்த அரசு வீட்டுக்கு செல்ல வேண்டும் எனவும், ஆட்சியை முன்னெடுக்க முடியாவிட்டால் தம்மிடம் ஒப்படைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார். அவரால் இந்த அரசை சட்டப்பூர்வமாகவோ அல்லது வேறு வழியிலோ கவிழ்க்க முடியாது.

தற்காலிக அரச எதிர்ப்பு அலையை உருவாக்கலாம். அது நிரந்தரமாக அமையாது.”- என்றார். (அ)





# பல்நோக்கு அபிவிருத்தி செயலணியால் யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம்!

யாழ்ப்பாணம், டிசெ. 18

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலணியால் நேற்று இரத்த தான முகாம் நடத்தப்பட்டது.

கல்வியங்காடு, செம்மணி வீதி யா/ஞானோதயா விதியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் க. மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளரின் இணைப்பு அதிகாரிகள், பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் கொமாண்டர் பி. ஏ. விக்கிரமசிங்க, யாழ்ப்பாண மாவட்ட உதவிப்பணிப்பாளர் கப்டன் எஸ்.நிசாந் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில், பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் கொடையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியிருந்தனர்.

# நெடுங்கேணியில் பெண்ணைச் சுட்டு படுகொலை செய்த இளைஞர் கைது!

வவுனியா, டிசெ. 18

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவுப் பகுதியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைப் படுகொலை செய்தமை தொடர்பில் இளைஞர் ஒருவர் நெடுங்கேணிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சேனைப்புலவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை மோட்டர் சைக்கிளில் சென்ற பெண் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 31 வயதான சத்தியகலா என்ற பெண் மரணமடைந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெடுங்கேணிப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மரணமடைந்த பெண்ணின் உறவினரான 31 வயது இளைஞர் ஒருவரை அப்பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் வைத்துக் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸார் குறித்த இளைஞரைக் கைதுசெய்ய முற்பட்டபோது அவர் நஞ்சு மருந்து அருந்தியுள்ளார். இதையடுத்து அவர் உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த இளைஞர் தோட்டத்தில் மறைந்து இருப்பதற்கு உதவிய குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ)

# இரண்டு இளைஞர்கள் ஹெரோயினுடன் கைது

பசறை, டிசெ. 18

ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் பசறையில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பதுளை குற்றத் தடுப்புப் பொலிஸாரும், பசறைப் பொலிஸாரும் இணைந்து, பசறை, கோயில்கடை பகுதியிலுள்ள இருப்பிடமொன்றை சுற்றிவளைத்துத் தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதன்போது 4 ஆயிரத்து 730 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், 19 மற்றும் 21 வயதுகளுடைய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (இ)

## அனைத்திலும்...

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் கடந்த புதன் கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு - செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர். ஆனாலும், வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மேயராக தொடர்ந்து பதவி வகிக்கவும் வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறான நிலையில், வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எடுத்த முடிவு தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் தமிழ் ஊடகங்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணம் மாநகர சபையில் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் சமர்ப்பித்திருந்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்து வாக்களிப்பது தொடர்பில் எனக்கு எதுவும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தீர்மானம் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களால் எடுக்கப்பட்டிருந்தது. எனவே, இதுபற்றி கருத்துக்கூற நான் விரும்பவில்லை.

ஆனால், எனது பொதுவான கருத்து என்னவெனில், உள்ளூராட்சி சபைக்கோ அல்லது மாகாண சபைக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ தெரிவு செய்யப்படுபவர்கள் மக்களின் நன்மை கருதிச் செயல்பட வேண்டும். அரசியலுக்கு அப்பால் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் செயல்படுவதே அவசியமானதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு சில முக்கியமான தீர்மானங்களை அவசியமான நேரங்களில் எடுக்கலாம் என்பதே எனது நிலைப்பாடு.

சகல விடயங்களிலும் அரசியல் நோக்கத்துடன் செயல்பட்டால் எதனையுமே எம்மால் நிறைவேற்ற முடியாமல் - அமுல்படுத்த முடியாமல் - ஒரு முன்னேற்றத்தை அடைய முடியாமல் போய்விடும். அதனைச் சகலரும் மனதில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்" - என்றார். (இ)

## கொரோனா...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 22 பேரில் 15 ஆண்களும், 7 பெண்களும் அடங்குகின்றனர். இவர்களில் 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 720 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## இது முடிவல்ல...

கடற்படைப் படகு ஒன்றில் சென்று சீன தூதுவர் பார்வையிட்டார். இதன் பின்னர் கருத்து தெரிவித்தபோது, இந்தப் பயணம் முடிவாக மாத்திரமன்றி ஆரம்பமாகவும் அமைந்துள்ளது என்றார்.

மூன்று நாட்களாக வட மாகாணத்தின் பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிட்ட இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் மன்னார் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு நேற்று முற்பகல் சென்றார்.

அங்கிருந்து தமது தூதரக பிரதிநிதிகளுடன் கடற்படை படகுகளில் இராமர் பாலத்தை நோக்கி புறப்பட்டார். இலங்கைக்கான சீன தூதரகத்தின் பிரதி பாதுகாப்பு தலைமை அதிகாரி கேணல் காஜ பின், தலைமை அரசியல் அதிகாரி லூஓ ச்சொங் உள்ளிட்டவர்களும் தூதுவருடன் இந்த பயணத்தில் இணைந்திருந்தனர்.

கடற்படை முகாமிலிருந்து புறப்பட்டவர்கள் சுமார் ஒரு மணித்தியாலம் பயணித்து இராமர் பாலம் அருகே சிறு படகொன்றில் ஏறினர். 17 கடல் மைல் தொலைவிலுள்ள இராமர் பாலம் மணல் திட்டை சீன தூதுவர் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர்.

சுமார் 20 நிமிடங்களாக இராமர் பாலத்தில் இருந்த இலங்கைக்கான சீன தூதுவர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பின்னர் அங்கிருந்து புறப்பட்டனர். மன்னார் - தாழ்வுபாடு பகுதியிலுள்ள கடற்படை முகாமிற்கு திரும்பிய சீனத் தூதுவரிடம் இந்த பயணம் தொடர்பில் செய்தியாளர்கள் வினவியபோது 'இதுவே முடிவு, ஆனால் ஆரம்பமும்கூட' என பதிலளித்தார்.

தலைமன்னாரில் இருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரை 32 கிலோமீற்றருக்குள் உள்ள 16 மணல் திட்டுக்களை கொண்ட பகுதி இராமர் பாலம் எனவும் ஸ்ரீ ராம்சேது என வணக்கத்திற்குரிய புனித பகுதியாகவும் இந்திய மக்களால் போற்றப்படுகின்றது.

இந்த 16 மணல் திட்டுக்களில் 8 மணல் திட்டுக்கள் இலங்கைக்கும் எஞ்சிய 8 இந்தியாவிற்கும் உரியவையாகும். மன்னாரிலுள்ள இராமர் சேது பகுதிக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டவர்கள் கடந்த மார்ச் மாதம் விஜயம் செய்திருந்தனர். இதன்போது இந்திய உயர்ஸ்தானிகர் விசேட பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார் - என்பது குறிப்பிடத்தக்கது.

## 'டான் சினி மரதன்'...

வரை இடம்பெறவுள்ள நிலையில் குறும்படப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பெருமளவிலான குறும்பட தயாரிப்பாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஏற்கனவே டான் தொலைக்காட்சி நிறுவனத்தால் 48 மணி நேரம் குறும்படப் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்தநிலையில் "டான் சினி மரதன்" குறும்படப் போட்டி நேற்று ஆரம்பமானது.

உள்ளூர் கலைஞர்களின் திறமையை வெளிக்கொணரும் முகமாக டான் தொலைக்காட்சி குழுமத்தின் தலைவர் எஸ். எஸ். குகநாதனின் வழிகாட்டுதலில் டான் தொலைக்காட்சியின் பிரதம செயல்பாட்டு அதிகாரி இளையதம்பி செல்வச்சந்திரனின் நெறிப்படுத்தலில் டான் தொலைக்காட்சியால் மீண்டும் "டான் சினி மரதன்" குறும்பட போட்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

குறும்பட போட்டியில் பங்கு பெறுவோர் ஒரு வார காலத்திற்குள் தமது குறும்படத்தை தயாரித்து முடிக்க வேண்டும் என்ற போட்டி நிபந்தனை அடிப்படையில் குறித்த போட்டியானது இடம்பெறவுள்ளது. இதில், இலங்கை முழுவதிலும் உள்ள குறும்பட தயாரிப்பாளர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனா, இந்தியாவுக்கு...

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சிறிமாவோ பண்டார நாயக்கா காலப் பகுதியில் இருந்து இலங்கையானது சீனாவுடனும், இந்தியாவுடனும் நெருக்கமான தொடர்புகளை பேணுகின்றது. அவருடைய காலப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது எமது நாடு நடுநிலையாக செயல்பட்டு இருந்தது. தற்போதும் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடு நிலை காணப்படுகின்றது. அதனை நாம் ஜனாதிபதியுடன் பேசியே முடிவுகளை எடுத்து வருகின்றோம்.

நாம் எந்த நாடுகளுக்கும் எமது பகுதிகளை விற்கவில்லை. எந்த நாட்டுக்கும் சார்பாக செயற்படவும் இல்லை. இயற்கையான பகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு நாம் சில பகுதிகளை வழங்குகின்றோம். இதனால் எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும். வடக்கில் இந்தியாவும், சீனாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வட பகுதி மக்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும் - என்றார். (ஐ)

# முருத்தெட்டுவே தேரரிடமிருந்து பட்டம்பெற மாணவர்கள் மறுப்பு

கொழும்பு, டிசெ. 18

கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பமான நிலையில் பல்கலைக்கழக வேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் இருந்து பட்டத்தைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் மறுத்துவிட்டனர்.

வேந்தர் நியமனம் அரசியல் ரீதியானது என்பதால் பல்கலைக்கழக உபவேந்தர் அல்லது சிரேஷ்ட பேராசிரியர்கள் பட்டங்களை வழங்க வேண்டும் என மாணவர் சங்கம் ஊடாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறைப்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய பட்டமளிப்பு விழாவில் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சிறப்பு அழைப்பாளராக மட்டுமே கலந்து கொண்டார். வழக்கமாக பட்டம் வேந்தரால் வழங்கப்படும் என்றபோதிலும் அது நடைபெறவில்லை.

இதேவேளை, வேந்தரின் அரசியல் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்முகமாக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளப் போவதில்லை என முகாமைத்துவ பீட விரிவுரையாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அத்துடன், கலைப்பீட பட்டதாரிகள் கறுப்பு பட்டி அணிந்து பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.



நேற்று ஆரம்பமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்றும், நாளையும் தொடர்ந்து இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 80 வீத...

விலை உயர்வை தொடர்ந்து, தற்போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு பிரதான நெருக்கடியாக மாறியுள்ளது. இதனால், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்களின் ஊழியர்கள் தங்கள் பணியை தொடர முடியாத நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் கூறினார்.

இதேவேளை சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக மரக்கறி மதிய உணவுப் பொதி ஒன்றின் விலை 180 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

## இலங்கையர்கள்...

எதிராகவே இவ்வாறு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நடந்த கூட்டங்களில் இவர்கள் கலந்துகொண்டதாகவும் இந்தியாவிலும் இலங்கையிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றதாகவும் இலங்கைக்கு எதிராகப் போரில் ஈடுபட்டதாகவும் சிலர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் பயங்கரவாத செயல்களை புரிய தயார்ப்படுத்துவதற்கும் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, சென்னையில் அகதியாக வசித்து வந்த மற்றொரு பிரதிவாதியான சற்குணம் இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பாதுகாப்புப் படையில் உறுப்பினராக இருந்ததாகவும் அந்த முகவரகம் தெரிவித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலர் கடந்த மார்ச் 25ஆம் திகதி அரபிக் கடலில் மீன்பிடிக் கப்பலில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, அவர்களிடமிருந்து போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இரு வீதிகளுக்கு இன்று அடிக்கல்!

மானிப்பாய், டிசெ. 18

நவாலியில் 70 வருடங்களாக திருத்தப்படாத இரு வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக அமைப்பதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதியிலுள்ள ஹேமலதா ஞாபகார்த்த சன சமூக நிலைய வீதி, நவாலி வடக்கு ஊட்டுக்குழி வீதி ஆகியனவே இவ்வாறு கொங்கிறீட் வீதிகளாக அமைக்கப்படவுள்ளன.

இந்த இரு வீதிகளும் தலா 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் இடம்பெறும் இந்த வீதிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-5)

## கனடாவில் விபத்து...

யளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இணுவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரான நமிர்தலதா பாலசிங்கம் (வயது 56) என்பவரே உயிரிழந்தார்.

எக்லிண்டன் அவென்யூவின் வடக்கே உள்ள டிக்ஸி ரோடு மற்றும் ஜம்கோ பவுல்வார்டுக்கு அண்மையில், தனது வீட்டிலிருந்து காரை வெளியே செலுத்தி வந்தவர், நடந்து சென்ற பெண்ணை மோதித்தள்ளியுள்ளார்.

இதன்போது, அந்தப் பெண், காரின் அடியில் சிக்கியிருந்தார். சம்பவ இடத்திற்கு வந்த மீட்புக்குழுவினர் அவரை காரின் அடியிலிருந்து மீட்டெடுத்த போதும், அவர் உயிரிழந்து விட்டார். (ஐ)

## அரசியல்...

தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பின் (பவ்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குற்றம்சுமத்தியுள்ளார்.

இது வாக்காளர்களை அவமதிக்கும் செயலாகும். அரசாங்கம் அமுல்படுத்திய கொள்கைகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்தை மதிப்பிடுவதை அரசாங்கம் தவறவிடும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலை அடுத்த வருட இறுதியிலோ அல்லது 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்திலோ நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு. தற்போதைய கோவிட் - 19 நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் கீழ் தேர்தலை நோக்கி நகர்வதில் சவால்கள் உள்ளன.

தேர்தலை ஒத்திவைக்கும் தற்போதைய நிர்வாகத்தின் முடிவு ஜனநாயக நடவடிக்கை அல்ல. ஆனால், பொதுமக்களின் பிரதிநிதிகளை நியமிக்கும் உரிமை பறிக்கப்படுவது மிகுந்த கவலை அளிக்கிறது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

மலர்வு 15 - 08 - 1939



உதிர்வு 11 - 12 - 2021

### திருமதி
### கிமாவதிதேவி ஆறுமுகம்

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொள்ளுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட கிமாவதிதேவி ஆறுமுகம் அவர்கள் 11.12.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், அகிலேசன்(கனடா), ஜெயசீலன்(லண்டன்), ரஜனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நீரயாக்ஸி, திருமகள் மற்றும் ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், புவிராஜசிங்கம்(கனடா), காலஞ்சென்ற சிலோசனாதேவி மற்றும் கமலாவதிதேவி, ஜெயராஜசிங்கம் (கொழும்பு), பரராஜசிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,அவினாஸ், அஷ்வின், சரண்யா, சகானா, விக்னேஷ், வஷ்னி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,செல்வராணி, சிவனேஸ்வரி, நிரோதினி மற்றும் காலஞ்சென்ற ராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

*பார்வைக்கு*
Saturday, 18 Dec 2021 12:00 PM - 3:30 PM
Divinity Funeral Care 209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

*தகனம்*
Sunday, 19 Dec 2021 10:00 AM
Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**அகிலேசன் - மகன்**
Mobile : +14165006766
**ஜெயசீலன் - மகன்**
Mobile : +447956027727
**ரஜனி - மகள்**
Mobile : +61433066843

தகவல்:
**குடும்பத்தினர்.**

# யாழ். மாவட்டத்தில் மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் துன்புறுத்தல்கள் உச்சம்

## சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிச. 18

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்று சிறுவர் பாது காப்பு உத்தியோகத்தர்களிடம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**

கடந்த ஒரு வாரத்துக்குள் இரண்டு துன்புறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடு கள் கிடைத்துள்ளன என்றும், அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக் கப் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 7இல் பயிலும் மாணவனைக் கடந்த 9ஆம் திகதி வகுப்பாசிரியர் தாக்கியதில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாணவன் காது மற்றும் உடல் ரீதியான தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவன் மீதான தாக்குதல் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரின் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேவேளை, வடமராட்சியின் பாடசாலை ஒன்றில் தரம் 6 இல் பயிலும் மாணவனைச் சித்திரப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் 200 தடவைகள் தோப்புக்கரணம் செய்யுமாறு நேற்றுமுன்தினம் தண்டனையளித்துள்ளார். அதனால் குறித்த மாணவன் உள, உடல் ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பெற்றோர் பாடசாலைக்குச் சென்றபோது மாணவனைத் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். அவருக்கான சிகிச்சைக்கு எவ்வளவு செலவானாலும் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது என விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதிகளவு தடவை தோப்புக்கரணம் செய்ய வைப்பது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு உயிரைப் பறிக்கும் வகையிலான சித்திரவதை என்று மருத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, காரைநகரின் பிரபல பாடசாலை அதிபர் அண்மையில் மாணவன் ஒருவரைத் தாக்கிய சம்பவம் பொலிஸாரின் தலையீட்டால் இணக்கத்துடன் முடித்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 03)

# போதைப்பொருள் வர்த்தகரை துரத்திச் சென்ற பொலிஸ் அதிகாரி தவறி விழுந்து உயிரிழப்பு!

திருகோணமலை, டிச. 18

திருகோணமலையில் போதைப்பொருள் வியாபாரியைத் துரத்தி சென்றபோது தவறி விழுந்த பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார்.

தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கஜ்ஜி முகமது தாரிக் (வயது - 49) எனும் பொலிஸ் அதிகாரியே இவ்வாறு மரணமடைந்தார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப் பொத்தானை எனும் இடத்தில் போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுகின்றது எனக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்திருந்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் போதைப்பொருள் வியாபாரி அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளார்.

தப்பியோடியவரைப் பொலிஸார் துரத்திச் சென்றவேளை குறித்த பொலிஸ் அதிகாரி தவறி விழுந்துள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரியை மீட்ட சக பொலிஸார், அவரைக் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அதேவேளை, துரத்திச் சென்ற போதைப்பொருள் வியாபாரியையும் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ)

## கதிர்காமம் இந்து மதகுரு கொலை பிரதான சந்தேகநபர் கைதானார்

கதிர்காமம், டிச. 18

பல குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர் ஒருவரை சுமார் 8 வருடங்களின் பின்னர் யால பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் தலைமறைவாகியிருந்தபோது கதிர்காமம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் யால வனப்பகுதியில் மறைந்திருந்து கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களைச் மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் நபர் வனவிலங்குகளை வேட்டையாடி சட்டவிரோதமாக இறைச்சி வியாபாரம் செய்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் கதிர்காமம் நாகஹா வீதியில் இந்து மதகுரு ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகவும் குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு
பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- பத்ரி
04.30 மணி : காட்டுன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை
இரவு
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



7.30 மணி: மனிதனின் மறுபக்கம்




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு